வாலி வதை

(சொர்ணம்மாள் சொற்பொழிவுகள்)

கோ. சுப்பிரமணிய பிள்ளை
தமிழ்ப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்
1969

சிவகாமி அச்சகம், அண்ணாமலைநகர்.

முன்னுரை

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே.

அஞ்சிலே யொன்று பெற்றான்
அஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ருக
ஆரியற் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக்கண் டயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவனம்மை அளித்துக் காப்பான்.

திரு. சேதுப்பிள்ளை அவர்கள் தமது தாயார் சொர்ணம்மாள் நினைவாக நிறுவிய நிதிக் கொடையிலிருந்து ஆண்டுதோறும் இப் பல்கலைக் கழகத்தில் நடந்துவரும் புலவர் விழாத் தொடர்ச்சியில் இவ்வாண்டு எளியேனைப் பங்கு கொள்ளுமாறு பணித்தார்கள். நானும் தடையின்றி ஒப்புக் கொண்டேன். தலைவர் அவர்கள் அன்பு மிகுதியாக உண்டு என்னும் நம்பிக்கையில் என் தகுதியைப் பற்றி இதுவரை சிந்திக்கவே இல்லை. இப்பொழுது தான் தெரிகிறது. ஆயினும் எப்படியோ ஒப்புக்கொண்டு விட்டேன். நீங்களும் கேட்க வந்து குழுமிவிட்டீர்கள். எனவே

திருவருட்டுணை கொண்டும் தலைவர் ஆசி அணை கொண்டும் உங்களுடைய அன்புப் புணை கொண்டும் இன்பத் தமிழ்க்கடலில் இறங்குகின்றேன்.

திரு. சேதுப்பிள்ளை அவர்களுக்குக் கம்ப ராமாயணத்திலே ஆர்வம் மிகுதியாக உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே இவ்வாண்டு கவியரசர் கம்பர், விழாப் புலவர் ஆகின்றார். கம்பர் காவியத்திலிருந்து வாலி வதையைக் காண்போம்.

வாலி வதை

படிப்போர் நோக்கத்திற்கு இயன்றவாறு பயன் தரக்கூடியது இராமாயணம். இது, பத்தியாய்ப் படிப்போர் புத்தியைக் கவரும் சமய நூலாகவும் திகழுகின்றது. சமய நோக்குள்ளவர்கள் இதனைப் படித்து உருகிப் பத்தி செய்து பரந்தாமனுக்கு ஆளாகிப் பரமபதத்தை அடையலாம். இதனை வெறும் பொழுது போக்காகக் கதைபோல் படித்துவிட்டு வைத்துவிடுபவர்களும்உண்டு. இது ஒரு வரலாற்று நூல் என்று வழக்கிடும் சழக்கர்களும் இருக்கிறுர்கள். இதனை ஒரு சிறந்த இலக்கிய நூலாகக் கொண்டு சொற்சுவை, பொருட்சுவை இன்பம் கண்டு அதிலேயே ஊறித் திளைப்பவர்களும் உண்டு. இதனை, நீதிகளைப் புகட்டவல்ல ஒரு உலகியல் நூலாகக் கருதுபவர்களும் உண்டு. இதனை ஓர் அறிவுக்களஞ்சியமாகப் போற்றுபவர்களும் உண்டு. நோக்கம் எதுவாக இருந்தாலும், இராமாயணத்தைப் படித்தால் அதுவே போதும் என்பது பொதுவான கருத்தாகும். பொதுவாக நோக்கம் நல்லதாகவே இருக்க வேண்டும். பாத்திரங்களின் குணுகுணங்களைத் திறனுய்வு செய்வதற்குத் தகுதிவாய்ந்த நூல் இராமாயணம். கம்பர் தமது காவியத்தில் பாத்திரங்களின் குணுதிசயங்களைத் தக்கவாறு திறனுய்வு செய்துகொண்டே கவிபாடிச் சென்றிருக்கிறுர். அவற்றை நாம் கண்டு களித்துப் பெரும்பயன் கொள்ளலாம்.

கடவுள் அவதாரமா ?

இராமனைத் திருமாலின் அவதாரமாகக் கொண்டு அக் கொள்கையிலே நம்பிக்கை வைத்து இராமாயணத்தைப் படித்தால், இராமன் கடவுளாகலாம். ஆனால் அவன் செயல்களுக்கு ஒரு தனிப்பெருமை இல்லாது போய்விடும். சாதாரண மனிதர்களாகிய நாம் அத் தெய்வப் பிறப்போடு எந்தவிதமான தொடர்பும் ஒத்த உணர்ச்சியும் கொள்ள இயலாது போய்விடும். இராமனை ஓர் அரசிளங் குமாரனாகவே, மனிதனாகவே வைத்துப் பார்க்க வேண்டும். அப்பொழுது அவன் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த ஓர் உத்தமனாய், அமரனாய், வானுறையும் தெய்வமாக மதிக்கப்பட்டுவிடுவான். உலகிற்கு அறத்தின் ஆறெலாம் இழைத்துக் காட்டிய ஒரு தலையான மனிதனாகவே இராமனை நாம் காணுதல் வேண்டும். அப்பொழுது இராமாயணம் மிகப் பெரிய ஏற்றம் பெற்று மேலும் நற்பயன்களை அளிக்க வல்லதாய் விளங்கும்.

வாலியைக் கொன்றது சரியா ?

இராமன் வாலியைக் கொன்றது சரியா, தப்பா என்ற கேள்வி அவன் வாலியைக் கொல்லும் முன்னரே எழுந்துவிட்டது. இலக்குவன் தான் அந்தக்கேள்வியை எழுப்பினான். இராமன் வாலியைக் கொல்ல வந்த செயலைக் கண்டித்துப் பேசினான். இராமனால் சரியான பதில் கூற முடியவில்லை. அந்த வாதத்தை வாலியே தொடர்ந்து நடத்தினான். இன்றளவும் அது ஓய்ந்த பாடில்லை. அது ஓயவே செய்யாது. உலகம் உள்ளளவும் அது நிலவி நிற்கும். ‘இராமன் செய்தது சரி

என்று வாலியே ஒப்புக்கொண்டுவிட்டானே! பின்னும் ஏன் அந்த வாதம்?' என்று சிலர் கேட்கிறார்கள். அவன் ஒப்புக்கொண்டான் ஆயினும் அதை நாமும் ஒப்புக்கொள்ள முடியுமா? அவன் எந்தச் சூழ்நிலையில் ஒப்புக்கொண்டான்? ஏன் ஒப்புக்கொண்டான்? அவன் ஒப்புக்கொண்டதனாலே இராமன் செய்தது சரி என்று ஆகிவிடுமா? இராமனே தான் செய்தது தப்பு என்று உணரவில்லையா? உரைக்கவில்லையா? இது போன்ற கேள்விகளையெல்லாம் நாம் ஆராயவேண்டியவர்கள் ஆகிறோம்.

கம்பர் இதைப்பற்றி என்ன கூறுகிறார்? அவர் தரும் குறிப்புக்கள் யாவை? அவர் கொள்கை யாது? கம்பர் கவிகளின் துணைகொண்டு இவற்றை நாம் ஆராய்கிறோம்.

கவந்தன் – பாத்திர அமைப்பு

ஆரணிய காண்டத்தின் கடைசியில் மின்னல் போல் வந்து மறைகிற பாத்திரம் கவந்தன். அவன் ஒரு பூதமாகக் காட்டில் இருந்துகொண்டு உயிரினங்களைக் கொன்று தின்று வந்தான். அவனை இராமன் கொன்றான். கவந்தன் சாபம் நீங்கித் தன் முன்னை வடிவம் பெற்று மேலுலகம் செல்லுமுன், சுக்கிரீவனைத் துணைக்கொள்ளும்படி இராமனிடம் கூறிப்போனான். உடனே சுக்கிரீவனை இராமன் தேட ஆரம்பித்து விட்டான். வழியில் சவரி சுக்கிரீவன் இருக்கும் இரலைக் குன்றத்துக்கு உரிய அதர்களை விளக்கிக் கூறினாள். இவ்வாறு சுக்கிரீவன்பெயரைக் கவந்தன் பிரேரிக்கவும் சவரி ஆமோதித்தது போலாகிவிட்டது. கவந்தன்

முன்மொழிய சவரி வழிமொழிய அதை இராமன் ஏன் எதற்கு என்றுஆராயாமல் ஏற்றுக்கொண்டுவிட்டான். எனவே ஆரணிய காண்டத்திற்குப் பின் இராமாயணத்தின் கதைப் போக்கையும் நிகழ்ச்சிகளையும் இன்னவாறுஅமைய வேண்டும் என அறுதியிடும் பொறுப்பு கவந்தனிடம் விடப்பட்டதாகத் தோன்றுகின்றது.

சொல்லின் செல்வன் சந்திப்பு

இரலைக்குன்றத்தில் சுக்கிரீவன் வாலிக்குப் பயந்து தன் தோழர்களான அனுமன், நீலன் போன்றவர்களோடு ஒளிந்துகொண்டிருந்தான். இராம இலக்குவர் வருவதைக் கண்டு அஞ்சிக் குகைகளுக்குள் ஓடிப் பதுங்கிக் கொண்டான். பின்னர் வந்தவர் யார் என்று அறிந்துவர அனுமனை அனுப்பினுன் சுக்கிரீவன். சொல்லின் செல்வனுன அனுமனின் இன்சொற்களால் உள்ளங் கவரப்பட்ட இராமன், அவன் சுக்கிரீவனின் அமைச்சன் என்பதைத் தெரிந்து அவனையே தானும் தேடி வந்திருப்பதாக அறிவிக்கிருன்.

விதியின் செயல்

கவந்தன் சுக்கிரீவனைப்பற்றி இராமனிடம் பேசாது போயிருப்பின், இராமன் இரலைக்குன்றம் போகாதிருத்தலும் கூடும். ஒருவேளை கிட்கிந்தை வழியாகச்சென்று வாலியைக் கண்டு நட்பு கொண்டிருக்கவும் கூடும். அங்ஙனம் கதையின் போக்கே மாறியிருக்கவும் கூடும். ஆனுல் விதியின் செயல் வேருக இருந்தது. அது கவந்தன் வாயிலாகக் காலன் ஒருவனை வாலிக்குத் தேடித்தந்தது.

உலகிற் சிலர் அதிர்ஷ்டத்தைத் தேடிக்கொண்டு போவார்கள். சிலரை அந்த அதிர்ஷ்டம் தானுகவே தேடிக்கொண்டு வரும். அதிர்ஷ்டத்தை நாம் இங்கே ஆக்கம் என்போம்.

“ஆக்கம் அதர்விஞய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை”

என்ருர் திருவள்ளுவர். ‘அதர்விஞய்’ என்பதற்கு, வழியை விசாரித்துக்கொண்டு, உசாவிக்கொண்டு, கேட்டுக்கொண்டு என்று பொருள். அந்த ஊக்கமும் இல்லாது ஏக்கம் கொண்டலேந்தான் சுக்கிரீவன். அவனே வலியத் தேடிக்கொண்டு அதர்விஞய் வந்தான் இராமன். இராமனே அடைவதற்கு எவ்வளவோ பேர் தவம் கிடக்கிருர்கள். அவர்களிடமெல்லாம் செல்லாது எல்லாம் இழந்து யாதொரு கதியுமின்றி ஒளிந்து கிடக்கும் சுக்கிரீவனேத் தேடிக்கொண்டு இராமன் வந்தான். இராமனுடைய அருமை பெருமையை அறியமாட்டாத சுக்கிரீவன் அவனேக் கண்டு அஞ்சி ஓடிவிட்டான். அவனேத் தொலேவில் கண்டதுமே தூர ஓடி ஒளிந்து கொண்டான். சுக்கிரீவன் இருக்கும் இடத்திற்குத் தன்னே அழைத்துச்செல்லும்படி இராமன் அனுமனிடம் வேண்டிக் கொண்டான். ஆனுல், இராமனிடத்திற்குச் சுக்கிரீவன் வரவேண்டுமே தவிர, இராமனுக சுக்கிரீவன் இடத்திற்குப் போவது முறையல்ல என்று அனுமன் கருதுகிருன். ‘ஆகா! சுக்கிரீவன் எவ்வளவு தவம் செய்திருந்தால் நீ அவனிடம் செல்ல விரும்புவாய்! நாங்கள் அல்லவோ உன்னே வந்தடைய வேண்

டும்? சுக்கிரீவனை இங்கேயே அழைத்துக் கொண்டு வருகிறேன்' என்று கூறி அனுமன் போகிறன் :

" என்றகம் உவந்து கோல
முகமலர்ந் தினிதி னின்ற
குன்றுறழ் தோளி னுரை
நோக்கியக் குரக்குச் சீயம்
சென்றவன் தன்னை யின்னே
கொணர்கின்றேன் சிறிதுபோது
வென்றியி ருத்தி ரென்று
விடைபெற்று விரைவிற்போனன் "

காலிசெய்யும் காலன்

மந்திரங்கெழுமு நூல் மரபுணர்ந்து உதவுபவன் என்று கம்பர் அனுமனைப் பாராட்டுகிருர். அதனல் சுக்கிரீவனுகிய அரசனுக்கு நல்லமைச்சுப் பட்டியலில் முதன்மையானவன் அனுமன் என்பது விளங்கும். 'வாலியைக் காலி செய்யக் கோலிய வில்லொடு ஒரு காலன் வந்துவிட்டான். இனி வாலி பிழைக்கமாட்டான். உனக்கு அரசாட்சி கிடைக்கப்போகிறது' என்று சுக்கிரீவன் முன் சென்று அனுமன் ஆனந்தத் தாண்டவம் ஆடினன். வாலியைக் கொல்லுதல் அரசினை வெல்லுதல் என்று சொல்லுதலைத் தவிர வேறு எதுவும் அப்பொழுதுபேசப்படவில்லை. 'வெவ்விராதனை இராவகை துடைத்தருள் அராவணை மாலெனும் அவ் விராமனை அடைக்கலம் புகுவாய்' என்று அனுமன் அழைத்தான். சுக்கிரீவனும் இராமன் இடத்திற்கு வந்தான். இராமன் அன்போடு கைகளை நீட்டி 'இப்படி வந்து உட்கார வேண்டும்' என்று இரங்கிக் கூறினன். அவர்கள் கூடியது அரக்கர் குலத்தை வேரறுக்க

வாய்த்த காலத்தில் கூட்டம் போலவும், தவமும் முயற்சியும் சேர்ந்தது போலவும், கல்வியும் ஞானமும் கலந்தது போலவும் இருந்தது.

சுக்கிரீவன் சரணுகதி

'கவந்தன் உன் நட்பைப் பெறும்படி எனக்குக் கூறினன். சவரி நீ இருக்கும் இடத்திற்கு வழி கூறி அனுப்பினுள். எங்கள் துன்பம் உன்னுல்தான் நீங்க வேண்டும். நீ எங்கள் குறையைத் தீர்த்துவை' என்று இராமன் வேண்டினன்.

"மையறு தவத்தில் வந்த
சவரியிம் மலையில் நீவந்து
எய்தினை யிருந்த தன்மை
யியம்பினன் யாங்க ளுற்ற
கையறு துயரம் நின்னுற்
கடப்பது கருதி வந்தேம்
ஐயநிற் றிரு மென்ன
அரிக்குலத் தரசன் சொல்வான்"

இவ்வாறு சுக்கிரீவன் உதவியைத் தான் நாடிவந்திருப் பதை இராமன் கூறினன். உடனே சுக்கிரீவன், 'என் அண்ணன் வாலியால் துரத்தப்பட்டு நான் இந்த மலை யில்வந்து ஒளிந்துகொண்டிருக்கிறேன். உயிர்விடவும் முடியவில்லை. உன்னை அடைக்கலம் அடைந்தேன். நீதான் காப்பாற்ற வேண்டும்' என்று சொன்னுன். இதுதான் சுக்கிரீவன் சரணுகதி.

"முரணுடைத் தடக்கை யோச்சி
முன்னவன் பின்வந் தேனை

இருணிலைப் புறத்தின் காறும்
உலகெங்குந் தொடர இக்குன்று
அரணுடைத் தாகி யுய்ந்தேன்
ஆருயிர் துறக்க லாற்றேன்
சரணுனைப் புகுந்தேன் என்னைத்
தாங்குதல் தருமம் என்றுன்''

சரண்புகுதல் என்றுலே திருவடியில் வீழ்ந்து வணங்குதலாகும். முன்னர் அனுமான் சரண் புகுந்ததைச் சொல்லிய பொழுது 'நின்ற அக்காலின் மைந்தன் நெடிது உவந்து அடியில் தாழ்ந்தான்' என்று கம்பர் பாடியுள்ளார். ஆனுல் இங்கே சுக்கிரீவன் அப்படி ஒன்றும் இராமன் காலில் விழுந்து வணங்கியதாகக் கூறுவில்லை. நான் இதை ஏன் இங்குச் சொல்கிறேன் என்றுல், சுக்கிரீவன் நல்லது கெட்டது அறியாதவன். "அஞ்சில் ஐம்பதில் ஒன்றறியாதவன்" என்று இராமனே பின்னுல் கூற இருக்கிறுன். இவன் வாலிக்கு எப்படித் தம்பியானுன் என்பதையும் நாம் இங்கே தெரிந்து கொள்வது நல்லது.

வாலி – சுக்கிரீவர் வரலாறு

சூரியன் தேர்ப்பாகனுன அருணன் என்பவன் ஓர் அழகிய பெண்ணுருக்கொண்டு இந்திரன் சபைக்குச் சென்றுன். இந்திரன் அப்பெண்ணுருவைக் கண்டு காமுற்றுக் கூடினுன். அப்போது பிறந்தவன் தான் வாலி. குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு அருணன் சூரியனிடம் திரும்பினுன். 'இக்குழந்தை ஏது?' என்று வாலியைக்கண்டு கேலியாய்க்கேட்டான் சூரியன். அதற்கு அருணன் தான் பெண்ணுருக்

கொண்டதால் விளைந்த விபத்து என்று விளக்கமாகக் கூறினான். இது சூரியனுக்குப் பெரிய வேடிக்கையாக இருந்தது. அப்படி இந்திரன் மயங்கும்படியாய் அருணன் தான் என்ன பெண்ணுரு எடுத்திருக்க முடியும் என்று சூரியன் ஆச்சரியப்பட்டான். 'எங்கே! அந்த வேடத்தைப்போட்டுக்காட்டு. நானும்பார்க்கட்டும்!' என்றான். உடனே நாணிக் கோணி அந்தப் பெண்ணுருவை அருணன் எடுத்துக் காட்டினான். அந்தப் பெண்ணுருவின் அழகிலே சூரியனும் மயங்கி விழுந்து இன்புற்றான். இதனால் தங்கச் சுடர் போன்று தம்பி சுக்கிரீவன் வெள்ளிக்குருத்துப் போன்ற வாலிக்குக் கிடைத்து விட்டான். இவ்வாறு இந்திரன் மகனாக வாலியும், சூரியன் மகனாகச் சுக்கிரீவனும் பிறந்து, அருணனின் பிள்ளைகளாதலின் அண்ணன் தம்பிகள் ஆயினர்.

'துன்பந் தீர்ப்பேன்'

அவ்வாறு அடைக்கலம் புகுந்ததாகச் சுக்கிரீவன் சொன்னவளவிலே, இராமன் முன்பின் யோசிக்காமல் 'போனது போக, இப்பொழுது உனக்குள்ள துன்பங்களைத் தீர்ப்பேன். இனிவரும் இன்ப துன்பங்கள் உனக்கும் எனக்கும் பொதுவாகும்' என்று பேசத் தொடங்குகிறான்.

> "என்றவக் குரங்கு வேந்தை
> யிராமனும் இரங்கி நோக்கி
> உன்றனக் குரிய இன்ப
> துன்பங்கள் உள்ள முன்னாள்
> சென்றன போக மேல்வந்
> துறுவன தீர்ப்பல் அன்ன
> நின்றன எனக்கும் நிற்கும்
> நேரென மொழியும் நேரா"

"இனி வானுலகினும் மண்ணுலகினும் உன்னை வருத்தியவர்கள் என்னை வருத்தியவர்கள் ஆவர். எவ்வளவு கெட்டவர்களாயிருந்தாலும், உனக்கு வேண்டியவர்கள் எனக்கும் வேண்டியவர்களேயாவர். உன் சுற்றத்தார் என் சுற்றத்தார். உன் உறவினர்கள் என் உறவினர். நீ என் உயிருக்கு உயிரான தோழன்" என்று இராமன் உறுதி கூறினான்.

"மற்றினி யுரைப்ப தென்னே
வானிடை மண்ணில் உன்னைச்
செற்றவர் என்னைச் செற்றார்
தீயரே யெனினும் உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார்
உன்கிளை யெனதென் காதற்
சுற்றமுன் சுற்றம் நீயென்
இன்னுயிர்த் துணைவன் என்றான்"

இதிலே முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. "தீயரே யெனினும் உன்னோடு உற்றவர் எனக்கும் உற்றார்" என்றான். அதனால் நல்லரே யெனினும் உனக்கு வேண்டாதவர் எனக்கும் வேண்டாதவரே என்பது தொக்கி நிற்கிறது. தான் வாக்குக் கொடுத்தபடியே நடக்கவும் செய்தான். வாலி நல்லவன்தான். ஆனால் அதைப்பற்றி இராமனுக்கு அக்கறை இல்லை. வாலி சுக்கிரீவனுக்கு வேண்டாதவன். அதனால் தனக்கும் வேண்டாதவன் என்று ஆகிவிட்டது. மேலும் பார்ப்போம்.

வாலி – சுக்கிரீவன் போர்

வேதவாக்கை விடவும் மேலானது இராமனுடைய சத்தியவாக்கு. அதைக் கேட்டுக் கொண்டும் சும்மா தான் இருந்தான் சுக்கிரீவன். அனுமான் உடனே எழுந்து இராமனை அடிபணிந்து வாழ்த்தி, "உங்கள் கோயிலுக்கு எழுந்தருளவேண்டும்" என்று அழைத்தான். சுக்கிரீவன் இருப்பிடத்தை உங்கள் கோயில் என்று இராமனை உளப்படுத்திக் கூற அனுமனுக்குத் தான் தெரிந்தது. அது சுக்கிரீவனுக்குத் தெரியாது. சுக்கிரீவன் அழைக்கவேண்டியிருக்க, அனுமன்தான் அதைச் செய்யவேண்டியதாயிற்று. இராமன் அங்குச் சென்று விருந்துண்டான். அங்கே சுக்கிரீவன் மனைவியில்லாதிருப்பதைக் கண்டு வினவினான்.

"விருந்து மாகியம் மெய்ம்மை யன்பினோடு
இருந்து நோக்கிநின் றிறைவன் சிந்தியாப்
பொருந்து நன்மனைக் குரிய பூவையைப்
பிரிந்து ளாய்கொலோ நீயும்பின் னென்றான்"

இந்தக் கேள்வியைச் சுக்கிரீவனிடமே இராமன் கேட்டான். ஆனால் சுக்கிரீவன் பேசவில்லை. அனுமன்தான் குறுக்கிட்டுப் பேசுகிறான். மாயாவி என்ற அவுணனோடு வாலி போர் செய்தபொழுது மாயாவி பாதாளத்திற் சென்று ஒளிவதற்காகப் பிலத்துவாரத்துட் புகுந்தபொழுது வாலி அங்கேயும் அவனை விடாது பின்தொடர்ந்தான். அப்பொழுது இளவரசனான தம்பி சுக்கிரீவனைப் பிலத்தின் வாசலில் காவலுக்கு வைத்துவிட்டு வாலி உள்ளே சென்றிருந்தான். இருபத்தெட்டு மாத காலமாய் வாலி வெளிவராததால் அவன் இறந்து

விட்டான் என்று தீர்மானித்துச் சுக்கிரீவனுக்கு வாலியின் பட்டத்தைச் சூட்டி, மாயாவி வெளியில் வந்து விடுவானோ என்றுஅஞ்சிப் பிலத்தின்வாசலையும் பெரிய பெரிய கற்களைக் கொண்டு அடைத்துவிட்டார்கள். ஏனெனில் மாயாவி மிகப் பொல்லாதவன். மாயையுடையவன் மாயாவி. அவனும் துந்துபியும் மந்தோதரியின் உடன்பிறந்தவர்கள். இவர்கள் அசுர சிற்பியான மயன் என்பவனின் மக்கள். நெடுங்காலம் போர் செய்து மாயாவியைக் கொன்று விட்டு வாலி திரும்பி வந்து பார்த்தான். வாசல் அடைக்கப்பட்டிருந்தது. பலமுறை தம்பி! தம்பி! என்று கூப்பிட்டுப் பார்த்தான். ஏன் என்பார் இல்லை. தம்பி வாசலைப் பாதுகாத்து நின்ற விதம் பாராட்டப்பட வேண்டியதுதான் என்று நினைத்துக் காலால் எற்றிக் கற்களைத் தூள்பரத்திவிட்டு வாலி வெளியே வந்தான்.

"ஒளித்த வன்னுயிர்க் கள்ளை யுண்டுளங்
களித்த வாலியுங் கடிதி னெய்தினன்
விளித்து நின்றுவே றுரைபெ றுனிருந்து
அளித்த வாறுநன் றிளவ லாரெனு"

"வால்வி சைத்துவான் வளிநி மிர்ந்தெனக்
கால்வி சைத்தவன் கடிதி னெற்றலும்
நீல்நி றத்துவிண் ணெடுமு கட்டவும்
வேலைபுக்கவும் பெரிய வெற்பெலாம்"

மீண்ட வாலி சீற்றங் கொண்டவனுய்த் தம்பியைக் கடுமையாகத் தாக்கி விரட்டியடித்தான். சுக்கிரீவனும், விரட்டிக்கொண்டு வந்த வாலிக்கு அகப்படாதபடி வேகமாய் ஓடினுன்' என்று அனுமான் கூறிவருவதைக்

கேட்ட இராமன், "மிகவும் நன்று! நன்ருகத் தாவிச் செல்லக் கற்றுக் கொள்வதற்குச் சுக்கிரீவனுக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது போலும் என்று சிரித் தான்.

" என்று கால்மகன் இயம்ப ஈசனும்
நன்று நன்றெறு நனிதொ டர்ந்துபின்
சென்ற வாலிமுன் சென்ற செம்மல்தான்
அன்று வாவுதற் கறிந்த னன்கொலாம் "

மேலும் தொடர்ந்து அனுமன் கூறலுற்ருன்.

இராமனின் சீற்றம்

முன்னொரு காலத்தில் துந்துபியின் உடலை வாலி தூக்கியெறிந்து அது இவ் இரலைக் குன்றத்தில் விழுந்து இதன் தூய்மையைக் கெடுத்ததால், மதங்க முனிவர் சினந்து 'இம்மலையில் வந்தால் வாலி இறப்பான்' என்று ஒரு சாபம் கொடுத்திருந்தார். சுக்கிரீவன் இம்மலைக் குத் தப்பி வந்துவிட்டா.ன் வாலியால் வரக்கூட வில்லை. அதனுல் சுக்கிரீவன் உயிர் பிழைத்திருக்கிருன். ஆதலால் இவ்வுலகில் இவன் மனைவி ருமையைத்தவிர வேறு உரிமை கொண்டாட எதுவும் இல்லை. அந்த அருமந்த மனைவியையும் வாலி வைத்துக்கொண்டான். இவன் இங்குத் தனித்து வாழ்கிருன்" என்று சொல்லி முடித்தான் அனுமன்.

" உரிமை யென்றிவற் குரிய தாரமாம்
அரும ருந்தையும் அவன்வி ரும்பினுன்
இருமை யுந்துறந் திவனி ருந்தனன்
கரும மிங்கிதே கடவுள் என்றனன் "

பொய் சிறிதும் பேசும் வழக்கமில்லாதவனுன அனுமன் சுக்கிரீவன் மனைவியைப் பற்றிய வரலாற்றை இங்ஙனம் கூறி முடிக்கவும், இராமனுக்கு உதடுகள் துடித்தன. கண்கள் சிவந்தன.

“பொய்யி லாதவன் வரன்முறை யிம்மொழி புகல
ஐயன் ஆயிரம் பெயருடைய யலர்க்கும் அமலன்
வையம் நுங்கிய வாயிதழ் துடித்தது மலர்க்கட்
செய்ய தாமரை யாம்பலம் போதெனச் சிவந்த”

மறத்தைக் களைந்து அறத்தை நிலைநாட்டுதற்காகவே பிறந்தவன் இராமன் அல்லவா? ஆகவே அவன் சினம் கொண்டான்.

“திறத்து மாமறை யயனொடைம் முகன் பிறர்தேடிப்
புறத்தகத்துண ரரியதன் பொலனடிக் கமலம்
உறச்சி வப்பவித் தரைமிசை யுறலற மாக்கல்
மறத்தை வீட்டுத லன்றியே பிறிதுமற் றுண்டோ”

பிறவியைக் கொடுக்கவல்ல கருமவினைப் பயன்களுக்குக் கட்டுப்படாத திருமால் பிறவியை யெடுத்து வந்தது தீயவரையழித்துப் பாவத்தைப்போக்குதற்கும் நல்லவரை யருளித் தருமத்தை ஆக்குதற்குமே யாகலின், வாலியின் கொடுஞ்செயலைக் கேட்டவுடன் சீற்றம் அடைந்தான் என்று விளக்கியவாறு. அவதாரத்தால் மட்டுமன்றித் தன் இயல்பாலும் வாலி மேற் சினம் கொண்டான். எப்படியெனின், தன்மீது அன்பும் இரக்கமும் இல்லாது மாற்றாந்தாயான கைகேயி சொன்னவுடன் அரச பாரத்தைத் தம்பி பரதனுக்குக் கொடுத்துவிட்டுக் காடு போந்தவன் இராமன். அத்

தகையவன் அன்பில்லாத தமையனொருவன் தன் தம்பியின் மனையாளை விரும்பினான் என்ற சொல்லைக் கேட்டுத் தரிப்பானோ என்கிறார் கம்பர்.

"ஈரம் நீங்கிய சிற்றவை
　　சொற்றன ளென்ன
வாரம் வீங்குதோள்
　　தம்பிக்குத் தன்னரசுரிமைப்
பார மீந்தவன் பரிவில
　　னொருவன்ற னிளையோன்
தாரம் வவ்வின னென்றசொற்
　　றரிக்குமா றுளதோ"

முதலில் விரும்பினன் என்று தான் அனுமன் சொன்னான். பிறகு வவ்வினன் என்றாகிவிட்டது. விரும்புதல் வேறு; வவ்வுதல் வேறு. இராமன் இதனைக் கேட்டும் சும்மா பொறுத்துக் கொண்டிருப்பானா? "அவ்வாலி எங்கிருக்கிறான்? காட்டு அவனை. நான் இப்பொழுதே கொன்றுவிடுகிறேன். யார் வந்து தடுத்தாலும் விடமாட்டேன். அறிவுடையவனே! எங்கே அவன்?" என்று கூறினான்.

"உலக மேழினோ டேழும்
　　வந்தவ னுயிர்க்குதவி
விலகு மென்னினும் வில்லிடை
　　வாளியின் வீட்டுத்
தலைமை யோடுநின் தாரமும்
　　உனக்கின்று தருவேன்
புலமை யோயவன் உறைவிடம்
　　காட்டென்று புகன்றான்"

தாரம் விரும்பினன்

சொல்லின் செல்வனன அனுமன் தனது சொற்றிறமையால் இராமனை இந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டான். அனுமன் நீண்ட நேரமாய், முப்பத்து மூன்று செய்யுட்களால் வாலியைப் பற்றிக் கூறியும் இராமன் சிரித்துக் கொண்டே கேட்பதைப் பார்த்து, சொல்லுதல் வல்ல அனுமன் ''உரிய தாரமாம் அருமருந்தையும் அவன் விரும்பினன்'' என்று பேச்சொடு பேச்சாகச் சொல்லிவைத்தான். அது ஏதோ காட்டமான மருந்து கொடுத்ததுபோல் இராமன் மூளையில் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. சுக்கிரீவன் மனைவியைப் பற்றி, வாலி விரும்பினன் என்று யாரும் எதுவும் பேசினது கிடையாது. சுக்கிரீவன் அவளை நினைத்ததாகவோ, நினைத்துத்தேடியதாகவோ, தேடி வருந்தியதாகவோ யாதொரு சான்றும் கிடையாது. ருமை தன் கணவனைத் தேடியதாகவும் யாதொரு குறிப்பும் கிடையாது. வாலி ருமையைப் பற்றியதாகவோ, அவளுக்குக் கொடுமை செய்ததாகவோ, தகாதபடி நடந்து கொண்டதாகவோ எதுவும் கூறப்படவில்லை. சுக்கிரீவன் மனைவியை மீட்க முயன்றதாகவோ, அல்லது வாலியிடம் யார் மூலமேனும் கேட்க முயன்றதாகவோ எதுவும் நடந்ததாகவும் தோன்றவில்லை. ஆயினும் அனுமன் ''தாரம் விரும்பினன்'' என்று வாலிமேற் குற்றம் சாட்டினன். அனுமன் சும்மாவா சொல்லுவான்? அவன் 'பொய்யிலாதவன்' என்கிருர் கம்பர். அனுமன் சொன்னது மெய்யா? என்ற கேள்விக்கு மெய்தான் என்று கூருமல் 'பொய்யில்லை' என்ருர். இதுவரை யாரும் வாலிமேல் இந்தக்

குற்றத்தைச் சொல்லவில்லை. ஆயினும் அனுமன் இப்பொழுது சொல்கிருன்.

பொய்யிலாதவன்

அவன் பொய்யில்லாதவன் என்கிருர் கம்பர். பொய்யிலாதவன் என்பது பொய்யில் ஆதவன் என விரியும் என்பதையும் கம்பர் தெரியாமலா இருப்பார்? தெரிந்தும், பொய்யிலாதவன் என்றே கூறினர். மெய்யுடையவன் என்று பாடியிருக்கலாம். ஏனே அவர் அவ்விதம் பாடவில்லை. இது, ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ்சீசர் என்ற நாடகத்தில் அந்தோனி என்பவன் "புரூடஸ் பெருந்தன்மையுள்ள மனிதர்" என்று அடிக்கடிச் சொல்லிச் சொல்லி புரூடஸ் பெருந்தன்மையற்றவன் என்று காட்டுவது போலிருக்கிறது. அனுமன் பொய்யன் என்று யாரும் சொல்லவோ, நினைக்கவோ இல்லை. அந்த வேளையில் கம்பர் வேண்டாவிதமாய் இங்ஙனம் "பொய்யிலாதவன்" என்று கூறியிருப்பது சிந்திக்கவேண்டியதாகும் என்று கம்பர் பாடுகிருர். யாரோ மாருதி பொய்யன் என்று சொன்னதுபோலவும், "அப்படியில்லை; மாருதி பொய்யிலாதவன்" என்று கவிஞன் மறுத்துப் பேசுவ[illegible] போலவும் தோன்றுகிறது. மற்றும் பலர் இருக்கும்[illegible]து ஒருவனை மட்டும் பொய்யிலாதவன் என்ருல், அங்கே பொய்யர்களும் உண்டு என்பது பெறப்படும். அங்கு வேறு யாரும் பொய்யர்கள் இல்லை. பின் ஏன் புலவர் இவ்வாறு பாட வேண்டும்? அனுமன் ஒருவன் தான் ருமையைப் பற்றிப் பேசினுன். அனுமனும் 'இவற்குரிய தாரத்தை அவன்விரும்பினுன்' என்று சொன்னனே தவிர, 'வவ்வினுன்' என்று

அனுமன் வாயால் சொல்லவில்லை. கவிக் கூற்ருகத் தான் 'வவ்விஞன்' என்ற சொல் பயிலப்படுகிறது. உண்மையில் நடந்தது என்ன? பிலத்தினுள் அடைக் கப்பட்ட வாலி வெளியே வந்ததும் அரசகோலத்தில் இருந்த அன்புத் தம்பியை அடித்து விரட்டிஞன். அவன் அண்ணனுக்குப் பயந்து, அவன் வரமுடியாத இடமாய்ப் பார்த்து இரலை மலையில் வந்து ஒளிந்து கொண்டான். ருமையைப்பற்றி நினைக்கவேயில்லை. ஒரு வருமே நினைக்கவில்லை. இராமன் கேட்ட பிறகு தான் அனுமனுக்கே அதைச் சொல்லத்தோன்றியது. ஊரிலே விட்டு வரப்பட்டாள் என்று சொல்லாது 'அவன் விரும் பிஞன்' என்று சொன்ஞன். சுக்கிரீவன் ஓடியவுடனே அவன் மனைவியையும் வாலி அவனிடம் அனுப்பியிருக்க வேண்டும். அதைச் செய்யத் தவறியதால், அவன் விரும்பிஞன் என்று சொல்ல இடம் உண்டாயிற்று. இது வாலி அரச தர்மத்தில் வழுவியதன் பயன்.

வாலி ஒழுக்கம் தவறியவஞ?

உண்மையிலே வாலி ஒழுக்கத்தில் தவறி நடந் திருப்பின், அதை வேறு யார் பொறுத்தாலும், அவன் மனைவி பொறுக்கமாட்டாள். அவன் மனைவியோ தாரை. அவளை அழகுள்ளவளாக[illegible] கற்பிற் சிறந்த உத்தமியாகவும் கம்பர் நன்கு சித்தரிக்கிருர். இராவ ணன் இறந்தபொழுது மண்டோதரி அவன் சீதைமேல் வைத்த ஆசையால் கொல்லப்பட்டான் என்பதை வெளிப்பட எடுத்துக் கூறுகிருள். எந்த மனைவியும் தன் கணவன் வேறொரு பெண்ணை விரும்புவதைச் சும்மா பார்த்துக் கொண்டு இருக்கமாட்டாள். தன் எதிர்ப்பை

யும் வெறுப்பையும் மறுப்பையும் வெளிக் காட்டாதிருக்க மாட்டாள். அவன் இருக்கும்பொழுது அவனுக்குப் பயந்து சொல்லாதிருந்தாலும், செத்த பிறகாவது அதைச் சுட்டிக்காட்டி ஒரு சொட்டுக்கண்ணீர் விட்டுத் தான் தீருவாள். வாலி இறந்ததும் தாரை வந்து என்ன சொல்லி அழுகிருள்?

"வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்
கரைசே ராவிடர் வேலே காண்கிலேன்
உரைசே ராருயி ரேயென் உள்ளமே
அரைசே யானிது காண அஞ்சினேன்"

"என் இன்னுயிர் நாயகா! நான் நினைத்ததை நினைக்கும் கள்ளமில்லாத என் உள்ளம் ஒத்தவனே! என் தலைவா! மலைபோன்ற நின் தோள்களினிடையே நாள்தோறும் தங்குபவளாய்த் துன்பம் என்பது இன்னதென்றறியாமல் இருந்தேன். இப்பொழுது உன் நிலையைக் காண அச்சமாய் இருக்கிறது" என்று அழுகிருள். வாலி ருமையோடு நாட்கள் கழித்திருப்பானுகில் தாரை இவ்வாறு சொல்வாளா? துன்பமே அறியாது இருந்திருப்பாளா? 'வாலியை' உள்ளமே என்று அழைத்திருப்பாளா? 'இதுவரையில் எப்பொழுதும் என்னேடு மாறுபடாத குணத்தையுடையவனே!' என்று அடுத்த பாடலில் கூறுகின்ருள்.

"துயரா லேதொலை யாத வென்னையும்
பயிரா யோபகை யாத பண்பினேய்
செயிர்தீ ராய்விதி யான தெய்வமே
உயிர்போ னுடை லாரு முய்வரோ"

தாரை தன் கணவனைப் 'பொய்யுரையாத புண்ணிய' என்று அழைக்கும்பொழுது நமக்குப் புல்லரிக்கிறது. ஐயோ! பாவம்! என்று நாமும் அழுகிறோம்.

"நையா நின்றன ஞனிருந் திங்ஙன்
மெய்வா னோர்திரு நாடு மேவினுய்
ஐயா நீஎன தாவி யென்றதும்
பொய்யோ பொய்யுரை யாத புண்ணியா"

இராமனுக்கு வைத்த சோதனை

இராமன் வாலியைக் கொல்ல ஒருப்பட்டெழுந் தானே தவிர, சுக்கிரீவன் அதை நம்பக்கூடவில்லை. சோதனைகள் வைத்து இராமனது ஆற்றலை அளவிட முற்படுகிறான். ஏழு மராமரங்களையும் ஒரே அம்பால் துளைக்கச் சொல்கிறான். இராமன் வில்லின் நாணொலியை எழுப்பியதும் எல்லோரும் தூர ஓடிப் போய் ஒளிந்து கொண்டனர். இலக்குவன் ஒருவன் தான் அஞ்சாது இராமனின் அருகில் நின்றான். பிறகு அம்பை எடுத்து எய்யும் நேர்த்தியைப் பார்ப்பதற்கு அனுமன் முதலிய எல்லோரும் திரும்பிவந்து கூடினர். வில் வீரனான இராமனும் அம்பை எய்தான்.

"எய்தல் காண்டுங்கொ லின்னமென்
றரிதின்வந் தெய்திப்
பொய்யில் மாருதி முதலினோர்
புகழ்வுறும் பொழுதின்
மெய்கொள் வார்சிலை நாணினை
முறையுற வாங்கி
வெய்ய வாளியை யாளுடை
வில்லியும் விட்டான்"

இங்கே அனுமனைக் கம்பர் 'பொய்யில் மாருதி' என்று மீண்டும் கூறுதல் கருதத்தகும். இராமனது அம்பு ஏழு மராமரங்களோடு கீழேழுலகங்களையும் தொளைத்துச் சென்றது. 'அறத்தினுக்காருயிர்த் துணைவன்' இராமன் ஆகையால், குறியைத் தவிர வேறு எங்கும் அவன் அம்பு செல்லவில்லை. இராமன் பெருமையை அப்பொழுதுதான் சுக்கிரீவன் உணரத் தொடங்கிப் பேசுகிறான்.

" என்னெனக் கரியதெப்
பொருளுமெற் கெளிதலால்
உன்னையித் தலைவிடுத்
துதவினர் விதியினர்
அன்னையொப் புடையவுன்
னடியருக் கடியன்யான்
மன்னவர்க் கரசவென்
றுரைசெய்தான் வசையிலான் "

இலக்குவனுக்குச் சோதனை

அடுத்து, வாலியினாற் கொல்லப்பட்டவனும், எருமைக் கடாவின் உருவம் பூண்டவனும் மாயாவியின் உடன் பிறந்தவனுமான துந்துபியினது உலர்ந்த எலும் புத்திரளை, இராமன் ஏவலால், இலக்குவன் கால் விரலைக்கொண்டு தூக்கியெறிந்து வெகு தொலைவிற் சென்று விழச் செய்தான். துந்துபி யென்னும் வாத்தியத்தினது பேரொலி போல் அவ்வசுரன் முழக்கம் செய்வான் ஆதலால் துந்துபி எனப்பட்டான்.

இராம – சுக்கிரீவர் நட்பு

இந் நிகழ்ச்சிக்குப் பின் நெய்த்தலைப் பால் கலந் தனைய நேயத்தனாக ஆகிவிடுகிறான் சுக்கிரீவன். சீதை கழற்றி யெறிந்த கலன்களிற் சிலவற்றை இராம னிடம் சுக்கிரீவன் காட்டுகிறான். இராமன் வருந்து கிறான். சுக்கிரீவன் தேற்றுகிறான்.

"பெருமையோ ராயினும் பெருமை பேசலார்
கருமமே யல்லது பிறிதென் கண்டது
தருமம்நீ யல்லது தனித்து வேறுண்டோ
அருமையே துனக்குறி னவலங் கூர்தியோ"

சீதையை எப்படியாவது மீட்கவேண்டும் என்று இராமன் துடிக்கிறான். சீதையை முதலில் மீட்போம் என்கிறான் சுக்கிரீவன். ஆனால் அனுமன் முதலில் வாலியைக் காலிசெய்ய வேண்டும் என்கிறான். வாலியைக் கொன்று சுக்கிரீவன் அரசனான பிறகுதான் படைகளைத் திரட்டமுடியும்; படைகளைத் கொண்டு தான் சீதையைத் தேடமுடியும்; இராவணன் இருப் பிடம் எங்குள்ளது என்று மானுடப் பிறப்பையுடைய நமக்குத் தெரியாது என்கிறான்.

"வானதோ மண்ணதோ மற்று வெற்பதோ
ஏனமா நாகர்த மிருக்கைப் பாலதோ
தேனுலாந் தெரியலாய் தெளிவ தன்றுநாம்
ஊனுடை மானிட மான துண்மையால்"

அனுமன் முதலியோர் முகத்தினும், வாலினும் வானரம் போலினும் மற்றப்படி மனித வடிவினரேயாவர். ஆத

லால் முதலில் வாலியைக் கொல்வதுதான் செய்யத் தக்கது என்று அனுமன் கூற இராமனும் இசைந்து யாவரும் வாலிபாற் போயினர்.

தனுவின் செல்வன்

“ஆதலா லன்னதே யமைவ தாமென
நீதியாய் நினைந்தனெ னெனறி கழ்த்தினன்
சாதுவா மென்றவத் தனுவின் செல்வனும்
போதுநாம் வாலிபால் என்னப் போயினர்”

வில்லாளரானர்க் கெல்லாம் மேலவன் என்று இந்திரசித்து புகழப்பட்டாலும், வில்வித்தையில் இராமனுக்கு மேலாக யாரும் விளங்கியதில்லை. ஆதலால் அவன் தனுவின் செல்வன் என்னப்பட்டான். யுத்த காண்டம் மீட்சிப் படலத்தில் வில்லின்செல்வன் என்று இறுதியாக அறுதியிட்டுப் பாராட்டப்படுகிறான்.

“அருந்ததி யனைய நங்கை
யமர்க்கள மணுகி யாடற்
பருந்தொடு கழுகும் பேயும்
பசிப்பிணி தீரு மாறு
விருந்திடு வில்லின் செல்வன்
விழாவணி விரும்பி நோக்கிக்
கருந்தடங் கண்ணும் நெஞ்சுங்
களித்திட வினைய சொன்னாள்”

அக் கற்புக்கரசியாகிய சீதை என்ன சொன்னாள்? “என் நல்லொழுக்கத்தின் நிலைமையை என் கணவனுக்குத் தெரியச் சொல்லி, என் கணவனின் ஆற்றலையும், வீரத்தையும் உலகம் அறியச் செய்து, எனது

குலத்தின் பெருமையை யாவருக்கும் விளக்கி, இவ் வுலகத்தை அழியாது நிலைபெறும்படிச் செய்த குரங்காகிய அனுமனுக்கு என் கற்பு அழியாத நிலைபேறுடைமையை நல்குமா?" என்று மனதுக்குள் சொல்லினள்.

"சீலமுங் காட்டியென்
கணவன் சேவகக்
கோலமுங் காட்டியென்
குலமுங் காட்டியிஞ்
ஞாலமுங் காட்டிய
கவிக்கு நாளனுக்
காலமுங் காட்டுங்கொல்
லென்றன்கற் பென்றுள்"

இராமன் பெற்ற தெய்வப் படைகள்

விசுவாமித்திரர் இராமனுக்கு வில்வித்தையெல்லாம் கற்றுக்கொடுத்துப் பல்வகை மந்திரப் படைக்கலங்களையும் கொடுத்தருளினர். அத் தெய்வப்படைகள் எல்லாம், ஒருவன் செய்த நல்வினைப் பயன்கள் மறுபிறவியில் அவனையே தேடிச் சென்று உதவுவன போலச் சென்றடைந்தன.

"ஆறிய அறிஞன் கூறி
யளித்தலும் அண்ணல் தன்பால்
ஊறிய உவகை யோடும்
உம்பர்தம் படைக ளெல்லாம்
தேறிய மனத்தான் செய்த
நல்வினைப் பயன்க ளெல்லாம்
மாறிய பிறப்பிற் றேடி
வருவபோல் வந்த வன்றே"

இதை அனுமன் சுக்கிரீவனுக்குச் சொல்லும்பொழுது,—

"காதிசேய்தரு கடற்கடவுள் வெம்படையினர்" என்று கூறினன்.

இராமன் வில்லாற்றல்

முதல் நாளாகிய ஒருநாட் போரில் தான் கண்டதைக்கொண்டு இராமன் விற்றிறமையை வானுறப் புகழ்ந்து பேசுகிருன் இராவணன். இராமன் வில்லிலிருந்து ஓர் அம்பு வெளிப்படுமாயின் அது உலகெல்லாம் புகுந்து செல்வதல்லாமல் ஊழிக் காலமானுலும் ஓயும் என்று சொல்ல முடியுமா? அவ்வம்புகள் ஊழித் தீயையும் தீய்த்துவிடும். செல்லுகின்ற திக்குக்களையும் தீய்த்துவிடும். ஏதேனும் மாருகச் சொல்லத் தொடங்கினுல், சொல்லுகின்ற வாயையும் தீய்த்துவிடும் மனத்தில் மாறுபட எண்ணினுல் எண்ணுகின்ற மனத்தையும் தீய்த்துவிடும் என்று தன் அச்சத்தை வெளிப்படுத்துகிருன் இராவணன்.

"போயபின் அவன்கை வாளி
யுலகெலாம் புகுவ தல்லால்
ஓயுமென் றுரைக்க லாமோ
வூழிசென் ருலும் ஊழித்
தீயையும் தீய்க்குஞ்செல்லும்
திசையையுந் தீய்க்கும் செப்பும்
வாயையுந் தீய்க்கும் உன்னின்
மனத்தையுந் தீய்க்கு மன்னே"

அவன் எப்படி வில்லை வளைக்கிருன், அம்பை மாட்டுகிருன் என்றே சொல்ல முடியாது. அரக்கர் சாக வேண்டுமென்று அவன் கருதினுல் உலக முழுதும் அம்பு மயமாகி விடுகிறது.

“ வரிசிலை நாணிற் கோத்து
வாங்குதல் விடுதல் ஒன்றும்
தெரிகிலர் அமர ரேயும்
ஆரவன் செய்கை தேர்வார்
பொருசினத் தரக்க ராவி
போக்கிய போக வென்று
கருதவே யுலக மெங்குஞ்
சரங்களாய்க் காட்டு மன்றே”

வில்லாற்றலும் சொல்லாற்றலும்

இராமனுடைய சாரங்கம் என்னும் வில்லினின்றும் கிளம்பும் அம்புகள் கவிஞன் நாவிலிருந்து வரும் பொருள் பொதிந்த சொற்கள் போலவும், அவர்கள் இயற்றும் செய்யுள் தொடை போலவும், அச் செய்யுளின் இசைபோலவும் பொருந்திப் பலவகைப் பட்ட அலங்காரத்தின் தன்மை கொண்டன.

“ நல்லியற் கவிஞர் நாவிற்
பொருள்குறித் தமர்ந்த நாமச்
சொல்லெனச் செய்யுட் கொண்ட
தொடையெனத் தொடையை நீக்கி
எல்லையில் செல்வந் தீரா
இசையெனப் பழுதிலாத
பல்லலங் காரப் பண்பே
காகுத்தன் பகழி மாதோ”

வேத மந்திரங்கள் தப்பினும் அவன் அம்புகள் தப்ப மாட்டா.

“ முப்புர மொருங்கச் சுட்ட
மூரிவெஞ் சிலையும் வீரன்
அற்புத வில்லுக் கைய
அம்பெனக் கொளலும் ஆகா
ஒப்புவே றுரைக்க லாவ
தொருபொரு ளில்லை வேதந்
தப்பின போது மன்னன்
தனுவுமிழ் சரங்கள் தப்பா ”

கம்பர் காவியத்தின் சிறப்பியல்பு

தமிழில் கம்பராமாயணம் என்னும் இராமாவதாரம் மிகவும் விரும்பிக் கற்கப்படுகிறது. ஏனெனில், மற்றத் தமிழ் நூற்களிற் காணப்படாத ஒரு தனிச் சிறப்பு கம்பர் காவியத்திற்கு உண்டு. இராமநாடகமாகிய தமது நூலில் கம்பர் கதாபாத்திரங்களுக்கு உள்ள சிறப் பியல்புகளை முக்கியமாக எடுத்து நன்கு விளக்குகிறார். கதையும் அவ்வியல்புகளுக்குப் பொருத்தமாக அமைந்து நிற்கும். இதை ஆங்கிலத்தில் Characterisation என்று சொல்வர். கம்பர் உலகியலின் உண்மைப் போக்குகளையும் அதிநுட்பமான குணங்களையும் அவ்வவற்றிற்கமைந்த கதாபாத்திரங்களின் மூலம் நமக்கு இனிது எடுத்துப் புகட்டுகின்றார். இரண்டு பாத்திரங்களை எடுத்து அவர்களுக்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும், ஏற்றத் தாழ்வுகளையும், வளர்ச்சி வீழ்ச்சிகளையும் நாம் உய்த்துவரும் முறையில் மறைமுகமாகவும் எடுத்துச் சொல்லி வெளிப்படையாகவும் சுவையும் இன்பமும் பெருகக் கூறுவார். வால்மீகர் அவ்வாறு பொருத்தி அமைக்கவில்லை. கதைக்குத் தக்கவாறு பாத்திரங்களுக்குக் குணங்களை ஏற்றிவிடு

கின்றார். அதனால் வால்மீகி இராமாயணம் சுவையற்று நம் மனதைக் கவர இயலாது போகிறது. கம்பர் காவியமோ நமது உள்ளத்தை அப்படியே அள்ளிக் கொள்கிறது. முன்னுக்குப்பின் முரண்பாடின்றிக் கதா பாத்திரங்கள் தத்தம் இயல்புகளுக்கேற்ப நடிக்கிறார் கள். வெளியுலகில் நாம் காணும் மனித இயல்புகளையே கம்பரிலும் நாம் கவிதை உருவிற் காண்கிறோம். நமக் கும் சுவைக்க முடிகிறது. பிறமொழிகளில் உள்ள இராமகாதைகள் எல்லாம் ஏதோ பிசாசுக் கதைகள் போன்று சுவையில்லாது கழிகின்றன. அவ்விதம் ஒவ் வொருவருடைய குண குணங்களை வலியுறுத்தும் பொழுது கம்பர் சில பாத்திரங்களுக்குச் சிறப்புப் பட்டங்களும் சூட்டிவிடுகிறார். வில்லின் செல்வன், சொல்லின் செல்வன், தனுவின் செல்வன், கேள்விச் செல்வன் முதலியன அத்தகைய பட்டங்களாகும். இனி, கேள்விச் செல்வன் யார் என்று பார்ப்போம்.

கேள்விச் செல்வன் யார் ?

சீதையைத் தேடிவரும் இராம இலக்குவர் இரலை மலையை வந்து அடைந்தனர். அங்கு அனுமனைச் சந்தித்துச் சுக்கிரீவனோடு நட்புக் கொண்டனர். அங்கே அனுமன் வாலியைப்பற்றிய செய்திகளை இராம னுக்கு அறிவிக்கலுற்றனன். வாலி யார்? எங்கே இருக்கிறான் ?

“ நாலு வேதமாம் நவையி லார்கலி
வேலி யன்னதொன் மலையின் மேலுளான்
சூலி தன்னருள் துறையின் முற்றினான்
வாலி யென்றுளான் வரம்பி லாற்றலான் ”

நான்கு வேதங்களையும் வேலியாகக் கொண்டு வாலி கிட்கிந்தை மலையில் வாழ்ந்து வந்தான். நான்கு வேதங்களுக்கும் தான் வேலியாகவுள்ளவன் என்றும் பொருள்படும். இதனுல் வாலி நல்ல வேத ஞானம் படைத்தவன் என்பது தெளிவாகும். அந்தணரே வேதங்கள் கற்றற்கு உரியராகலின், கற்ருேர்கள் ஓத வும் தான் செவியாற் கேட்டு உணர்ந்தவன் வாலி என்று நாம் கொள்ளலாம். 'கற்றலிற் கேட்டலே நன்று' என்று சொல்வார்கள். 'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம், செல்வத்துள் எல்லாம் தலை' என்ற குறளின்படி வாலி இக் கேள்விச் செல் வத்தை நிறையப் பெற்றிருந்தான்.

அக் கேள்விச் செல்வத்தோடு வாலி சிவபத்திச் செல்வமும் சிறக்கப் பெற்று விளங்கினுன். சூலாயுதப் படையையுடைய சிவபெருமானின் அருட்செல்வத்தை யும் பெற்றவன் வாலி என்பதை அனுமன் 'சூலி தன் அருள் துறையின் முற்றினுன்' என்று கூறுகிருன். வாலியின் வலிமைக்கு எல்லையில்லை.

வாலிபெற்ற வரம்

இவ்வாறு சிவனருள் பெற்ற வாலி எட்டு மூர்த்த மாய் விளங்குகிற அக் கடவுளிடத்தில் இடையருப் பேரன்பு பூண்டவன். தன்னை எதிர்த்தோர் வலிமை யில் பாதியைக்கவரும் வரமும் அக்கடவுளால் வழங்கப் பட்டிருந்தான்.

“கிட்டு வார்பொரக் கிடைக்கின் அன்னவர்
பட்ட நல்வரம் பாகம் எய்துவான்
எட்டு மாதிரத் திறுதி நாளுமுற்று
அட்ட மூர்த்தி தாள்பணியும் ஆற்றலான்”

வாலி தன் வலிமையை எவ்வாறு பயன்படுத்தினுன்? பிறருக்குத் தீங்கிழைக்க அல்ல; பின் அவன் என்ன செய்தான்?

வழிபாட்டுக்குப் பயன்பட்ட வலிமை

ஐம்பூதங்களேயும், சூரிய சந்திரர்களேயும் இயமானனேயும் எட்டுத் திருமேனிகளாகக் கொண்டு எட்டு மூர்த்தமாய் இருக்கிற சிவனே எட்டிப் பிடிப்பதுபோல் எட்டுத் திசைகளின் எல்லேவரையிற் சென்று நாள் தோறும் வழிபட்டு வந்தானும். அவ்வாறு சிவனே வழி படுவதற்குத் தான் அவன் ஆற்றல் பயன்பட்டது என்று அனுமன் இராமனுக்குச் சொல்கிருன்.

ஞானசம்பந்தர் பாராட்டு

காவிரியின் வடகரையில் திருவடகுரங்காடுதுறை என்று ஒரு பாடல்பெற்ற தலம் இருக்கிறது. அங்கு வாலி சிவபெருமானே வழிபட்டுப் பூசை செய்தான் என்பது தல வரலாறு. அந்தத் தலத்தைத் திருஞான சம்பந்தர் சென்று வழிபட்ட காலத்தில் வாலியின் பத்தித்திறத்திற் பரவசம்அடைந்தார். உளங்குளிர்ந்து உவந்துவந்து பாடினுர். வாலி அங்கு வழிபட்டு நடத்திய சிவபூசையின் சிறப்பைத் தமது ஞானக்கண்களாற் கண்டார். அவர் கண்ட காட்சியை நாமும் அவ்வாறே காணுமாறு ஓர் இலக்கிய ஓவியமாகச் செந்தமிழ்ப் பாக்களால் தித்திக்கும் பான்மையில் திருத்திக் கொடுக்கிருர் காணுங்கள்.

“ கோலமா மலரொடு தூபமுஞ்
சாந்தமுங் கொண்டுபோற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினுர்
திருந்து மாங்கனிகளுந்தி

ஆலுமா காவிரி வடகரை
யடைகுரங் காடுதுறை
நீலமா மணிமிடற் றடிகளை
நினையவல் வினைகள்வீடே''

தேவாரத்திற் பாராட்டப்படவேண்டுமானால் வாலியின் சிறப்பை என்னென்று சொல்வது! நல்ல நல்ல நாண் மலர்களான பல வண்ணப் பூக்களோடு மலர்ப் பலி கொடுத்து தூபம் காட்டி, சந்தனம் சாத்தி வாலி வழிபட, அதனைப் பெரிதும் மனம் உவந்து ஏற்றுக் கொண்டு சிவன் அங்கு வீற்றிருந்தார் என்று ஞான சம்பந்தர் நமக்குச் சொல்கிறார். எல்லோருடைய பூசையையும் இறைவன் ஏற்றுக்கொள்ள மாட்டான் அல்லவா? பொக்கமிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பவன் முக்கண்ணன். அதைக் குறிப்பிடவே சம்பந்தர் 'வாலியார் வழிபடப் பொருந்தினார்' என்று திருந்த மொழிந்தார். அவ்வளவு சிறந்த சிவபக்தனை ''வாலி'' சொல்வது இழுக்கென்று ''வாலியார்'' என்று ஆர் விகுதி கொடுத்துப் பெருமையாகப் பேசுகின்றார். கோலமாமலர் என்று பிள்ளையார் சிறப்பித்துக் கூறுவதால், வாலி நல்ல அழகான அன்றலர்ந்த மலர்களைக் கொண்டுவந்து சிவபெருமானுக்கு அருச்சனை செய்தான் என்று தெரிகிறது. மலர் என்றால் அவ்வளவு பிரியம் சிவனுக்கும் சிவனடியார்களுக்கும்.

அப்பர் புகழ்மாலை

திருஞானசம்பந்தரைப் போல் திருநாவுக்கரசரும் வாலியார் என்றே குறிப்பிட்டுத் திருவையாற்றில் வாலி வழிபட்ட அழகை வியந்து மகிழ்ந்து விளம்புகின்றார்.

“ பீலிகை யிடுக்கி நாளும்
பெரியதோர் தவமென் றெண்ணி
வாலிய தறிகள் போல
மதியிலார் பட்ட தென்னே
வாலியார் வணங்கி யேத்துந்
திருவையா றமர்ந்த தேனோடு
ஆலியா வெழுந்த நெஞ்சம்
அழகிதா வெழுந்த வாறே ”

‘ அணங்கார் பாகன் ’

வாலி சிவனை உள்ளன்போடு வழிபட்டான் என்பதை அவன் மனைவி தாரையும் தெரிவிக்கின்றாள். இராமனால் வாலி உயிர் கவரப்பட்டுக் கிடக்கிறான். துன்பம் என்பதே இன்னதென்று அறியாதவள் தாரை. வாலி இறந்துகிடக்கிறான் என்றே அவளால் நம்பமுடியவில்லை. அவ்வாறு சும்மா வாலி படுத்துக் கிடக்க அவள் ஒருநாளும் பார்த்ததில்லை. அவன் மேலே விழுந்து புலம்பினாள். ‘நாதா! திசை திசை தோறும் சென்று நல்ல நறிய ஒள்ளிய மலர்களைக்கொண்டுவந்து ஒவ்வொருநாளும் முக்காலவேளையும் தவறாது உள்ளன்போடு சிவனுக்குப் பூசை செய்து வணங்குவாயே; இவ்வளவு நேரம் படுத்திருக்கமாட்டாயே; ‘இன்று ஏன் இன்னும் எழுந்திருக்கவில்லை?’ என்று கேட்கிறாள்.

“ அணங்கார் பாகனை யாசை தோறுமுற்
றுணங்கா வொண்மலர் கொண்டு ளன்பொடும்
இணங்காக் காலம் இரண்டொ டொன்றினும்
வணங்கா தித்துணை வைக வல்லையோ ”

ஆசை என்றால் திசை; அவன் தினமும் எட்டுத்திக்கும் செல்லுவான் என்று தாரையும் சொல்கிறாள். வாலி சிறந்த சிவபக்தனாதலாலும், நாள்தோறும் பலதிசைகளிலும் சென்று மீள்பவனாதலாலும் தான் செல்லுமிடங்களில் சிவன் உறையும் புனிதமான இடங்களுக்கெல்லாம் சென்று சிவபூசை செய்து வருவானாம். காலை, நண்பகல், மாலை என்னும் முக்காலமும் வழிபடுவான். இங்கே தாரை அணங்கார் பாகனை என்று குறிப்பது நோக்கத்தகும். சிவபெருமான் பெண்ணின் பெருமையை நன்கு உணர்ந்தவர். உமாதேவியை என்றும் பிரியலாகாது என்று இடப்பாகத்தில் வைத்திருப்பவர். அத்தகைய கடவுளை வழிபடும் நீ என்னைத் தனியே விட்டுப் பிரியலாமா? என்று கணவனைச் சுட்டியும், நீ நாள் தவறாது முப்பொழுதும் வணங்கிவந்த அந்தத் தையல்பாகன் உன்னை என்னிடமிருந்து இவ்வாறு பிரிக்கலாமா? என்று இறைவனைச் சுட்டியும் குறிப்பிற் பொருள் உணர்த்தவே அணங்கார் பாகனை என்று அமைத்துக் கூறினாள்.

அமிழ்து தந்தவன்

தாரை தன் கணவனின் சிறந்த குணங்களிலே ஈடுபட்டவள். அவனுடைய வள்ளன்மையைப் பல முறையிலும் நேரில் அறிந்தவள். 'ஐயோ! இராமன் வீணாக இவ்வாறு மறைந்துநின்று கொன்றுவிட்டானே. அவன் நேரில் வந்து வாயால் இது செய் என்று சொன்னால் என்கணவன் மறுக்காமல் செய்திருப்பானே. தன் வாழ்வை வேண்டுமானாலும் தயங்காது கொடுத்திருப்பானே!' என்று கதறினாள்.

“ ஓயா வாளி ஒளிந்துநின் றெய்வான்
ஏயா வந்த இராமன் என்றுளான்
வாயால் ஏயினன் என்னின் வாழ்வெலாம்
ஈயா யோவமிழ் தேயும் ஈகுவாய் ”

‘வாலி தேவர்களுக்கு அமுதம் கடைந்து கொடுத்தவனுயிற்றே!’ என்கிருள் தாரை.

உதிரக்கடலில் வாலி

தாரையின் மகன் அங்கதன், தாய்க்கு முன்னுல் வந்து தந்தையைப் பார்த்தான். அப்பொழுது வாலி குற்றுயிராய்க் கிடந்தான். அங்கதனுக்குத் துன்பம் என்ருல் எப்படியிருக்கும் என்று தெரியாது. வாலியின் அரசாட்சி செங்கோலாட்சியாதலால் கிட்கிந்தை முழுவதிலும் எப்பொழுதும் எஞ்ஞான்றும் யாரும் எக்காரணத்தாலேனும் எனைத்தும் வருத்தமுற்றதில்லை. அதனுல் அங்கதன் பிறந்தநாள் முதல் துன்பமுற்ற மனத்தவரைக் கண்களாற் பார்த்திலனுதலால் இடருடையுள்ளத்தோர் இன்னவாறிருப்பர் என்று மனத்திணுல் உணர்ந்தவனும் இல்லை. இன்று வழக்கமான மலர்ப்படுக்கையை விட்டுச் செங்குருதிச் சேற்றிலே முங்கிக் கிடந்த தன் தந்தையைக் கண்டான் என்று கவிஞர் கம்பர் உருகிப் பாடுகிருர்.

“ சுடருண்ட மதிய மென்னத்
தோன்றினன் தோன்றி யாண்டும்
இடருடை யுள்ளத் தோரை
எண்ணிணும் உணர்ந்தி லாதான்

மடருடை நறுமென் சேக்கை
மலையன்றி யுதிர வாரிக்
கடரிடைக் கிடந்த காதற்
ருதையைக் கண்ணிற் கண்டான்"

கொடுத்துச் சிவந்த கை

தன் தந்தை இரத்தக் களரியினிடையே புதைந்து கிடப்பதைக் கண்டு துடிதுடித்து வாலியின் மேல் விழுந்து புரண்டு அங்கதன் அங்கலாய்த்து அழுதான்.

"எந்தையே யெந்தை யேயிவ்
வெழுதிரை வளாகத் தியார்க்கும்
சிந்தையாற் செய்கை யாலோர்
தீவினை செய்தி லாதாய்
நொந்தனை யதுதானிற்க
நின்முகம் நோக்கிக் கூற்றம்
வந்ததே யன்றோ அஞ்சாது
ஆர்அதன் வலியைத் தீர்ப்பார்"

இதனால் வாலி இந்த உலகத்தில் எவரையும் நோவச் செய்ததில்லை என்பது பெறப்படும். மேலும் ஓலமிடுகிருன் அங்கதன். 'கற்றைவார் சடைமுடிக் கண்ணுதலேயன்றி மற்ருெரு தெய்வம் தன்னை உண்டு எனவும் நினைக்கமாட்டாயே. உனக்கா இந்தக் கதி வந்தது? தேவர்கள் எல்லோரும் உன்னுலே உயிர் வாழ்ந்தவரல்லவா? நீ அவர்கள் உண்ணும் பொருட்டு அமிர்தத்தைக் கடைந்தெடுத்து அள்ளியள்ளிக் கொடுத்தாயே. கொடுத்துக்கொடுத்து நின் கையும் சிவந்ததே. அவ்வமிர்தத்தில் ஒரு துளியேனும் நீ அருந்தியறியாய். அவ்விதம் அருந்தியிருந்தால் நீ இவ்வாறு இறக்கும்

நிலையை அடைந்திருக்க மாட்டாய். உன்னைவிடச் சிறந்த வள்ளலை நான் கேட்டும் அறியேன்.

“பஞ்சின் மெல்லடியாள் பங்கன்
பாதுக மல்ல யாவும்
அஞ்சலித் தறியாச் செங்கை
யாணையாய் அமரர் யாரும்
எஞ்சல ரிருந்தா ருன்னுல்
இன்னமு தீந்த நீயோ
துஞ்சினை வள்ளி யோர்கள்
நின்னின்யார் சொல்லற் பாலார்”

பஞ்சின் மெல்லடியாள் பங்கன் என்ற சொற்றொடர் மணிவாசகரின் மாண்புறு பாடல் ஒன்றை நம் மனக் கண்முன் கொண்டு வருகிறது. ‘பஞ்சின் மெல்லடி யாள் பங்க நீயல்லால் பற்று நான் மற்றிலேன் கண் டாய்’ என்பது தேனினும் இனிக்கும் திருவாசகத்தின் ஒருவாசகமன்றோ!

பத்துத்தலைப் பூச்சி

இராவணன் எட்டுத்திசை யானைகளையும் பொருது வலியழித்தவன். ஆனுல் வாலி என்றுல் குலைநடுங்கு வான். ஒருநாள் வாலி கடற்கரையில் நீராடிவிட்டுக் கிழக்கு நோக்கிக் கண்மூடியிருந்து சிவனைத் தொழுது கொண்டிருந்தான். அங்குத் தற்செயலாக வந்த இராவணன், அதுதான் தக்க சமயம் என்று, வாலி யின் பின்பக்கமாய் வந்தான். அங்கே வாலியின் வால் நீளமாய்ச் சுருண்டு கிடந்தது. வாலைப் பிடித்திழுத்து வாலியைத் தூக்கித் தரையில் அடித்துவிடலாம் என்று

நினைத்து வாலைப் பிடிக்கப் போனான். ஆனால் அவன் பிடிக்கும்முன்பே வால் இராவணனைப் பிடித்துக்கொண்டது. மின்சார சக்தி பற்றியிழுப்பதுபோல் வாலியின் வால் இராவணனது இருபது தோள்களையும் பிடித்துச் சுற்றிப் பின்னிக் கொண்டது. இராவணன் வாலைவிட்டு விட்டான். ஆனால் வால் இராவணனை விடவில்லை. வாலி திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவன் வானத்திற் கிளம்பி எழுந்தபொழுதெல்லாம் இராவணன் அந்தரத்தில் ஊசலாடிச் சத்தமிடாது இரத்தம் கக்கித் துயருற்றான். வீட்டிற்குத் திரும்பியதும் தொட்டிலிற் கிடந்த மகன் அங்கதனுக்கு வாலில் தொங்கிய இராவணனை எடுத்துப் பத்துத்தலைப்பூச்சி என்று விளையாட்டுக் காட்டிய வீரன் வாலி. மறக்கமுடியாத அந்நிகழ்ச்சியைக்குறித்து அங்கதன் ஆற்றாது புலம்பினான்.

“ தரையடித் ததுபோற் றீராத்
தகையவித் திசைகள் தாங்கும்
கறையடிக் கழிவு செய்த
கண்டகன் நெஞ்சம் உன்றன்
நிறையடிக் கோல வாலின்
நிலைமையை உன்னுந் தோறும்
பறையடிக் கின்ற தந்தப்
பயமறப் பறந்த தன்றே ”

அவன் வாலின் பெருமைதான் என்னே! அதை நினைத்தாலே இராவணனது நெஞ்சம் பறையடிக்குமாம். தூது சென்ற அனுமன் ‘வாலும் போய் விளிந்ததன்றே. அஞ்சலை அரக்க!’ என்ற பொழுதுதான் இராவணன் நெஞ்சில் பறையடிப்பது நின்றதுபோலும்!

இச் செய்தியை ஞானசம்பந்தரும் தமது தேவாரத்தில் அழகுறப் பொறித்திருக்கிறார்.

“ நீலமா மணி நிறத்தரக்கனை
  இருபதுகரத்தொ டொல்க
வாலினுற் கட்டிய வாலியார்
  வழிபட மன்னுகோயில்
ஏலமோ டிலையில வங்கமே
  யிஞ்சியே மஞ்சருந்தி
ஆலியா வருபுனல் வடகரை
  யடைகுரங் காடுதுறையே ”

வாலும் கோலும்

இராமனுக்கு வாலியைப் பற்றிக் கூறிக் கொண்டு வந்த அனுமன், இராவணனைப் பற்றியும் சிறிது தொட்டுக் கூறுகிறான். ‘வாயுவின் வேகம் என்று சொல்வார்களே அதையும் மிஞ்சியது வாலியின் வேகம். முருகக் கடவுள் வேலாயுதம்கூட அவன் மார்பிற் பாயாது. வாலியினுடைய வால் எங்கெங்கு செல்லுமோ அங்கெல் இராவணனுடைய கோலும் குடையும் செல்லாவாயின. இராவணனை வென்றவன்வாலி’ என்ற சொல்லின் செல்வன் சொல்லினுன்.

“ கால்செ லாதவன் முன்னர்க் கந்தவேள்
வேல்செ லாதவன் மார்பின் வென்றியான்
வால்செ லாதவா யலதி ராவணன்
கோல்செ லாதவன் குடைசெ லாதரோ ”

பின்னிரண்டடிகளில் அனுமன் பொடி வைத்துப் பேசுகிருன். கவர்படு பொருளில் கட்டுரைக்கிருன். வாலி

யின் வால் வலி தொலைந்தாலொழிய இராவண னுடைய ஆட்சியையும் குடையையும் அழிக்க முடி யாது என்றும் பொருள்படப் பேசினான். அவர்கள் இருவரும் பின்னர் நட்புக் கொண்டபடியால் இராவண னுக்கு உதவியாக வாலி வரக்கூடும் என்று இராமன் நினைக்கும் விதத்தில் பேசினான்.

காலும் தலையும்

இன்னொரு குறிப்பையும் எடுத்துச் சொன்னான். பூமியின் அடியிலே படுத்துக்கொண்டு ஆதிசேடன் படங்களையுடைய ஆயிரம் தலைகளையும் விரித்துத் தாங்குகின்ற இந்தப்பூபாரத்தை வாலி இம்மலையின்மீது நடந்துகொண்டே தாங்குகிறான் என்று வாலியின் உலகம் காக்கும் திறலை எடுத்துக் கூறினான்.

"படர்ந்த நீணெடுந் தலைப ரப்பித்
தடர்ந்து பாரம்வந் துறவ நந்தனும்
கிடந்து தாங்குமிக் கிரியை மேயினா
னடந்து தாங்குமிப் புவனம் நாளெலாம்"

ஆதிசேடன் தாங்கமாட்டாமல் வருந்திக் கீழே படுத் துக் கொண்டு ஆயிரம் தலையாலும் சுமக்கும் உலக பாரத்தை வாலி வருந்தாமலே மிக எளிதாக அதன் மேலே நடந்துகொண்டே தாங்குகின்றான் என்று சொல்லின் செல்வன் சொற்களை வைத்து விளையாடு கிறான். வாலியை ஒழித்தால்தான் பூமிக்குப் பாரம் குறையும், ஆதிசேடனுக்கும் தலைச்சுமை குறையும் என்ற ஒரு குறிப்பையும் இராமனுக்குக் காட்டுகிறான். இந்த மலையின்மேல் இருப்பவனான வாலி நடக்கும்

பொழுது, வருந்தாது படுத்துக் கொண்டு பூமியைத் தாங்குகின்ற ஆதிசேடனும், வாலி நடக்கும்பொழுது கால் வைக்கும் இடமெல்லாம் ஓடிஓடிச் சென்று தன் தலைகளைப் பரப்பி இடம் பெயர்ந்து அவனுடனே சென்று தாங்கவேண்டியிருக்கிறது. வாலியின் உடற் பொறையைச் சேடனால் தாங்கமுடியவில்லை. நீதான் அந்தப் பூபாரத்தைக் குறைக்க வேண்டும்' என்றான்.

வாலி இறந்தது எப்படி?

இனி வாலி எவ்வாறு இறந்தான் என்பதை நோக்குவோம். இராமனைத் துணையாகப் பெற்று நெஞ்சம் துணிந்த சுக்கிரீவன் வாலியைப் போர்க்கு அறைகூவி ஆர்ப்பரித்தான். அப்பொழுது தன் மாளிகையில் ஓர் அமளியின்மேல் ஒரு பாற்கடல் பள்ளி கொண்டிருப்பதுபோல் இருந்தான் வாலி. இயல்பாகவே பால்போல் வெண்ணிற மேனியையுடையவன் வாலி. அதிலும் அவன் சிறந்த சிவபக்தன் ஆனதால் எப்பொழுதும் வெண்ணீறு சன்னித்த மேனியனாகவே இருப்பான். அதனால் பாற்கடல்போற் கிடந்தான் வாலி என்று பாடுகிறார்.

"மாற்பெரும் கடகரி
முழக்கம் வாளரி
ஏற்பது செவித்தலத்
தென்ன வோங்கிய
ஆர்ப்பொலி கேட்டனன்
அமளி மேலொரு
பாற்கடல் கிடந்ததே
யனைய பான்மையான்"

குகைக்குள் இருக்கிற சிங்கம் வெளியே யானை பிளிறு வதைக் காதுகொடுத்துக் கேட்பதுபோல் சுக்கிரீவன் கூச்சலை வாலி செவி சாய்த்துக் கேட்டான். கோபத் தால் கொதித்தான். துள்ளிக் குதித்தான். தாரை மறித்தாள். இவ்விதம் தடை ஏற்பட்ட பின்னர் அவன் முற்பட்ட செயல் எவ்வாறு வெற்றியடைய முடியும்? இதைக் கம்பர் பாடும் பொழுது கவியும் அமங்கல மாகவே தொனிக்கிறது. வாலியின் வாயிலிருந்து வெஞ் சினத்தால் புகை கிளம்பியது. கண்ணில் தீப்பொறி பறந்தது. வாலி கோபத்தால் எழுந்து தம்பியை நோக்கி வேகமாய்க் கிளம்பியபோது வாயாற் சொல் லிப் பயனில்லையென்று தாரை அவள் முன்னுல் ஓடி இடை மறித்து இறுகத் தழுவிச் சேர்த்துக் கட்டிக் கொண்டாள். என்ன அன்பு! எப்படியாவது தன் கணவனைத் தடுத்துப் போகாமல் நிறுத்தி அவன் உயிரைக் காக்கவேண்டும் என்பதே அவள் கவலை. இதைக் கம்பர் சித்திரிக்கிருர். தாரை தடுக்கிருள். வாலி துடிக்கிருன். அவள் தலை அவன் மார்பிற் சாய்ந்து கிடக்கிறது.

கூந்தல் தீய்கிறது

வாலிக்கு அந்த நிலையிலும் மனைவிமேல் மாளாத காதல் மூளுகிறது. அவள் கூந்தலை உச்சிமோந்து உவக்கின்ருன். அவன் உயிர்ப்பின் வெம்மையாலும், கண்ணிற் பறக்கும் தீப்பொறியாலும் அவன் கூந்தல் தீய்ந்து போகிறது. குழைந்து புழுங்கிய அவனது கூந்தலைத் தீப்பற்றியது என்கிருர் கம்பர்.

“ஆயிடைத் தாரையென் றமிழ்திற் றேன்றிய
வேயிடைத் தோளினுள் இடைவி லக்கினுள்

வாயிடைப் புகைவர வாலி கண்வருந்
தீயிடைத் தன்னெடுங் கூந்தல் தீகின்ருள்"

தாரையின் தோள்களை 'அமிழ்தின் தோன்றிய வாயிடைத்தோள்' என்று கவிஞர் பாராட்டுகிருர். 'உறுதோறுயிர் தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு, அமிழ்தின் ஈன்றன தோள்' என்பது தமிழ்மறை. வாலியின் உயிர் தளிர்ப்பத் தீண்டுதலால் தாரையின் தோள்கள் தீண்டப்படுவதோர் அமிழ்தினுற் செய்யப்பட்டன என்ருர். அவளுடைய மெல்லிய தோள்களால் மட்டும் வாலியை தடுத்து நிறுத்திவிட முடியாது. அன்பால் அணைத்து அன்பால் நிறுத்தினுள் அவள். அவனும் நின்று அன்பால் உச்சிமோந்தான். ஆனல் அவள் கூந்தல் தீயில் எரிந்தது. ஒரு வாழ்வரசியின் கூந்தல் தீய்கிறது என்ருல் இதைவிட வேறு அமங்கலம் உண்டா? தீய சகுனம் உண்டா? கம்பர் வாயிலிருந்து தெய்வ வாக்காகவே இச் சொல் பிறந்ததுபோலும்!

பெண்மையால் பிழைத்தனை

வாலியின் தோள்களில், மலையில் மயில் படிந்திருப்பது போன்று தாரை தோன்றினுள். சினங்கொண்ட வாலி மனைவியிடம் அன்பு மனங்கொண்டு நின்று 'மலையில் விளையாடுகின்ற மயில் போன்றவளே! என்னைத் தடுக்காமல் விடு. அவன் வலிய வந்து சண்டைக்கு இழுக்கிருன். நான் போகாமல் இருக்கக்கூடாது. அது வீரமன்று. விடு! விடு!' என்று கெஞ்சினுன். அப்பொழுது தாரை, இராமன் துணை பெற்று சுக்கிரீவன் வந்திருப்பதைத் தெரிவிக்கிருள். அதைக் கேட்ட வாலி 'அடி பாவி! கரும வினைப் பயனைக் கடக்க

வொண்ணுது இவ்வுலக மாயையிற் கிடந்து வருந்துகின்ற உயிர்களுக்கெல்லாம் அறநெறி ஒழுக்கங்களை முறையாக நடந்து காட்டி உய்விக்க வந்த இராமனுக்குப் பொருந்தாதவற்றைக் கூறி உன் பெண் புத்தியால் தவறுசெய்து விட்டாயே!' என்று வெகுண்டான்.

"உழைத்த வல்லிரு வினைக்கூறு காண்கலாது
அழைத்தய ருலகினுக் கறத்தின் ஆறெலாம்
இழைத்தவற் கியல்பல இயம்பி என்செய்தாய்
பிழைத்தனை பாவியுன் பெண்மையால் என்ருன்"

பிழைத்தனை பெண்மையால் என்பது, பெண் புத்தியால் பிழை செய்தாய் என்றும், நீ பெண் ஆனதால் பிழைத்தாய் இல்லாவிடில் உன்னைக் கொன்றிருப்பேன் என்றும் இரு பொருள்படும். பின்னதே சிறப்புடைத்தென்க.

அறம் அழியாது

இம்மை மறுமை என்னும் இரண்டின்பயன்களையும் கருதும் இயல்புடையவன் இராமன். எல்லா உயிர்களையும் அறநெறியில் நின்று பாதுகாப்பவன் இராமன். தருமம் என்பதே அவன் தான். அத்தகையவன் தருமம் அழியும்படியாய் என் தம்பியுடன் சேர்வானு? என்கிருன் வாலி.

"இருமையும் நோக்குறும் இயல்பினுற்கிது
பெருமையோ விங்கிதிற் பெறுவ தென்கொலோ
அருமையின் நின்றுயிர் அளிக்கும் ஆறுடைத்
தருமமே தவிர்க்குமோ தன்னைத் தானரோ"

இந்த உலகத்தின் பேரரசாட்சியைத் தந்தை கொடுக்கத்தான் ஏற்று மகுடம் சூடும் வேளேயில் மாற்ருந் தாயின் சொல்லைக் கேட்டு அவன் தன் மைந்தனுகிய பரதனுக்கு அவ்வரச பதவியைக் கொடுத்து மகிழ்ந்த இராமனைக் கொண்டாடாது கண்டபடி எங்ஙனம் பேசத் துணிந்தாய் என்று உள்ளம் பதறி மனேவியை வாலி கண்டித்தான்.

"ஏற்றபே ருலகெலாம் எய்தி ஈன்றவள்
மாற்றவள் ஏவமற் றவள்தன் மைந்தனுக்கு
ஆற்றரும் உவகையால் அளித்த ஐயனைப்
போற்றலை இன்னன புகறற் பாலையோ"

குரங்குடன் சேர்வானு ?

'சுக்கிரீவனேடு துணேவேண்டி நட்புக் கொண்டான் இராமன் என்றுயே. இந்த உலகமெல்லாம் சேர்ந்து வந்தாலும் அவன் கையிலுள்ள வில் ஒன்று போதாதா? அவனுக்குத் துணே அவனேயல்லவா? கேவலம் அற்பத் தொழில் புரியும் குரங்கோடு அந்தப் பெரியவன் கூட்டுச் சேர்வானு?' என்று வாலி மனேவியைக் கேட்கிருன்.

"நின்றபே ருலகெலாம்
நெருக்கி நேரினும்
வென்றிவெஞ் சிலையலாற்
பிறிது வேண்டுமோ
தன்றுணே யொருவருந்
தன்னில் வேறிலான்
புன்றெழிற் குரங்கொடு
புணரு நட்பனே"

'தன் தம்பிமாரை உயிராகக் கருதி அவர்கள்மீது அன்பு பூண்டவன் இராமன். அத்தகைய அருட் கடலாகிய அவன் நானும் என்தம்பியும் நடத்தும் சண்டையினிடையே வந்து அம்பைப் போடுவானு?' என்று கேட்கிருன் வாலி.

"தம்பியர் அல்லது தனக்கு வேறுயிர்
இம்பரின் இலதென எண்ணி ஏய்ந்தவன்
எம்பியும் யானுமுற் றெதிர்ந்த போரிடை
அம்பிடை தொடுக்குமோ அருளின் ஆழியான்"

தப்புக் கணக்கு

இதனுல் வாலி ஒரு சிறந்த இராமபக்தன் என்பதும் இராமனை எவ்வாறு மதித்திருந்தான் என்பதும், தான் இராமனை நேரில் காணுதவனுயிருந்தும் அவனைப் பற்றிய செய்திகளையெல்லாம் நன்கு கேட்டறிந்து அவனுடைய சிறந்த குணங்களில் ஈடுபட்டு அவனிடம் பேரன்பு கொண்டிருந்தான் என்பதும் நன்கு விளங்கும். தம்பியரல்லது தனக்கு வேறு யார் இம்பரின் இலதென எண்ணி ஏய்ந்தவன் இராமன் ஆதலால் சுக்கிரீவனேடு சேரமாட்டான் என்று வாலி முடிவு கட்டுகிருன். இந்த இடத்தில்தான் வாலி தப்புக் கணக்குப் போட்டுவிட்டான். அவன் சிறந்த அறிவாளியாயிருந்தும் தன் வாயிலிருந்து வந்த சொற்களுக்கே உண்மைப் பொருள் யாது என்பதை உணரத் தவறிவிட்டான். இது ஒரு பெரிய அவலக்கூத்தாகவே முடிந்தது. தம்பிமார் என்று உள்ளவர்களிடத்தில் இராமன் அன்பு செய்பவன் என்பது உண்மை. அதனுல் சுக்கிரீவனுக்காக அம்பிடை தொடுக்கமாட்டான்

என்றது தப்பு. சுக்கிரீவன் தம்பி. தம்பியைத் தாங்கு வது தானே இராமன் இயல்பு. அவன் தம்பிக்குப் பரிவான், தமையனைப் பகைப்பான். வாலியும் இரா வணனும் தமையன்மார். இருவரையும் பகைத்தான். சுக்கிரீவனும், விபீடணனும் தம்பியர். இருவரையும் நேசித்தான். ஆனால் சுக்கிரீவன் தம்பி என்பதை நினைக்க வாலி மறந்துவிட்டான். பின் அவன் பிழைப் பானு?

'காகுத்தன் செய்யான்'

சுக்கிரீவன் தன் தமையனுக்கே கேடு சூழ்ந்து அவனுடன் நெருங்கிப் போருக்கு வருகிறான். இராமனே தன் தம்பியரையே தனக்கு உயிராகக் கொண்டவன். உடன் பிறப்புப் பாசத்தின் உயர்வை நன்கு உணர்ந்து அனுபவித்தவன். அன்னவன் இக்கொடிய நன்றிகெட்ட தம்பிக்கு இயன்றுவந்து போரின் நடுவில் அம்பு தொடுக்கமாட்டான். அது அறத்திற்கும், அருளுக்கும் மாருன அநீதியாகும். ஆகையால் கருணையங் கடலாகிய காகுத்தன் அப்படிச் செய்யான் என்று தாரையை விலக்கிக் கொண்டு வீர வாலி விரைந்து வெளிப்போந்தான்.

வாலியின் தோற்றம்

வந்த வாலியின் வாலியதோற்றமே ஒரு வண்ணம் தான். சோதியொளி வீசும் சுந்தரனுய் இலங்கினுன். அவனுடைய வெள்ளை வண்ணமும் வீரத்தின் திண்ணமும், வலிமிகு உடலும் ஒலிமிகு குரலும் சிரிப்பும், களிப்பும், பீடுபெறு நடையும், பாடுபெறு பார்வையும் பார்ப்

பவர்களைப் பின்வாங்க வைப்பனவாயிருந்தன. மரங்களின் பின்னல் பதுங்கி நின்ற இராமன் வியப்பில் ஆழ்ந்துவிட்டான். அருகில் நின்ற இலக்குவனை விளித்து, 'தம்பி! தேவர்களிலோ அசுரர்களிலோ இவனுக்கு ஒப்பாவார் யாரும் எவ்வுலகிலும் இல்லை. இவனது ஒளிவிடும் உடலுக்கு ஒப்பாக ஐம்பெரும் பூதங்களுள் எதனைக் கூறலாம்? அல்லது கடலோ மேகமோ உண்டா?' என்று கேட்டான்.

" அவ்வேலை இராமனும் அன்புடைத்
தம்பிக் கையன
செவ்வே செலநோக்குதி தானவர்
தேவர் நிற்க
எவ்வேலை எம்மேகம் எக்காலொ
டெக்கால வெந்தீ
வெவ்வேறு லகத்திவன் மேனியை
மாறும் என்றான் "

அன்பு இல்லாத தம்பி சுக்கிரீவன் போலன்றி இலக்குவன் அன்புடையவன் ஆதலால், அன்புடைத் தம்பி என்னப்பட்டான். இது சுக்கிரீவனுடைய அன்பிலாமையைக் குறிப்பிற் புலப்படுத்தியவாறு. இங்கே நாடகத்துள்ளே நாடகம் என்பதுபோல், ஒரு குட்டி நாடகமாக இந்த இடத்தில் இராமனுக்கும் இலக்குவனுக்கும் ஓர் உரையாடலை அமைத்துக் காட்டுகிறார் கம்பர். இது அவருடைய ஒப்பற்ற காவியத்தில் மட்டுமே காணப்படுகின்றது. இதனை ஆராய வேண்டும்.

'தம்பி! நன்ருகப் பார். கண்ணைத் துடைத்துப் பார்' என்கிருன் இராமன். ஆனல் தம்பி என்ன சொல்லுகிருன்? 'எனக்கு ஒன்றுமே புரியவில்லை' என்கிருன்.

"வள்ளற் கிளையான் பகர்வானின்
தம்முன் வாளுள்
கொள்ளக் கொடுங் கூற்றுவனைக்
கொணர்ந்தான் குரங்கின்
எள்ளற் கரும்போரது செய்கலன்
என்னும் இன்னல்
உள்ளத்தின் ஊன்ற உணர்வுற்றிலன்
ஒன்றும் என்ருன்"

இராமன் தன் தம்பி பரதனுக்கு அரசைக் கொடுத்துவந்த வள்ளல். இலக்குவனே தன் அண்ணன் இராமனுக்காக எல்லாவற்றையும் துறந்து காட்டுக்குப் பணிவிடை செய்யவந்த தம்பி. அண்ணன் நிலையில் இராமனும் தம்பி நிலையில் இலக்குவனும் மிகச் சிறந்தவர்கள். எனவே வள்ளற் கிளையான்' என்ருர் கம்பர். அந்த வள்ளற் கிளையாளுகிய இலக்குவன் கண்ணுக்குச் சுக்கிரீவன் தன் அண்ணனுகிய வாலியைக் கொல்ல ஒரு இயமனைக் கொண்டு வந்திருப்பது போல் தோன்றுகிறது. இராமன் வாலியின் உயிரை மறைந்து நின்று கவர வந்திருப்பதால் கொடிய கூற்றவனைப் போன்று காட்சியளிக்கிருன். ஆகவே சுக்கிரீவன் தம்பி என்று சொல்லவே தகுதியற்றவன். அவன் வாலியோடு நடத்தும் போரும் ஒரு சாதாரணக்

குரங்குச் சண்டை போலன்றி நேர்மையற்ற சூது நிறைந்த ஒரு வஞ்சகப் போராகவே இருக்கிறது. இத ஞல் என் அறிவே குழம்பிப் போயிருக்கிறது' என்று கூறி இலக்குவன் ஆற்ருதவனுகி மேலும் கூறுகிருன். 'வீரனே! அறநெறி கெடும்படியாக நம்பத் தகாத செயல்களைப் புரிவோரை நம்புதல் நல்லதல்ல. தன் தமையனையே பகைவனைப்போல எண்ணிக் கொல்ல வந்து நின்றவனுகிய இந்தச் சுக்கிரீவன் அயலாரிடத் தில் எவ்வாறு நம்பத்தக்க துணையாக இருப்பான்?' என்று கேட்டான்.

"ஆற்ருது பின்னும்
பகர்வான் அறத்தாறழுங்கத்
தேற்ருது செய்வார்களைத்
தேறுதல் செவ்விதன்ருல்
மாற்ருன் எனத் தம்முனைக்
கொல்லியவந்து நின்ருன்
வேற்ருர்கள் திறத்திவன்
தஞ்சமென் வீர என்ருன்"

சொல் விளையாட்டு

இராமனை இலக்குவன் 'வீர' என்று வேண்டு மென்றே விளிக்கிருன், அவன் செய்வது வீரச் செய லன்று என்று சுட்டிக் காட்டுவதற்காக. அந்த வீர என்ற இரண்டெழுத்துக்கொண்ட ஒரு சிறு சொல்லை வைத்துக்கம்பர் எவ்வாறு விளையாடுகிருர் பாருங்கள்! ஐந்து மணி நேரமாக ஒரு பட்டி மன்றம் வைத்து வாதிட்டு இராமன் செய்தது வீரமாகாது என்று தீர்மா னிக்கும் ஒரு முடிவின் பயனை ஒரு சிறு சொல்லைத் தக்க

இடத்தில் ஒரு தக்க பாத்திரத்தின் மூலம் கூறி அதை விடச் சிறப்பாக அப்பயனையும் முடிவையும் தரும்படிச் செய்துவிடுகிருர்.

'வில்லெடுத்து, வீரம் செறியப் பல்லோர் அறிய அஞ்சாது வெளிப்போந்து போர் செய்யும் வீரனுகிய உன்னை, இப்படி, மறைந்து வந்து பாசம் விசிறி உயிர் வவ்வும் கொடிய கூற்றுவனைப்போல வந்து ஒளியும்படி செய்துவிட்டானே அச்சுக்கிரீவன்' என்று குறிப்பது போல இல்லையா, 'வீர' என்ற அச்சொல்? குறிப்பாக மறைமுகமாக அந்தச் சிறுசொல் நம்மைச் சிந்திக்க வைக்கிறது. அது போதும். அப்பம் என்ருல் போதாதா? பிட்டா காட்ட வேண்டும்? இலக்குவன் தான் கூறவேண்டியதைக் கூறி, சுக்கிரீவன் ஒரு கொலைகாரன், பொய்யன், நம்பத் தகாதவன், அற மும் அன்பும் கெட்டவன் என்று கூறி, தான் ஓர் உத்தமமான தம்பி என்பதையும் காட்டிவிட்டான். இராமன் நிலை பிறரால் இகழத் தக்கதாகும் என்பதை யும் குறித்துவிட்டான். இவ்வளவு தூரம் இராமனைக் கண்டித்து இலக்குவன் ஒருநாளும் பேசியதில்லை. இது சற்று அதிகமாகவே இராமனுக்குப் பட்டது. ஆயினும் இலக்குவன் அவ்வளவுக்குப் பேசும்படியான நிலை ஏற் பட்டுவிட்டது அல்லவா? 'அப்பனே! நான் சொல் வதைக் கொஞ்சம் கேள்' என்று பீடிகை போட்டுப் பேசினுன்.

"அத்தா இதுகேள் என
ஆரியன் கூறுவான் இப்
பித்தாய விலங்கின்
ஒழுக்கினைப் பேசலாமோ

எத்தாயர் வயிற்றினும்
பின்பிறந்தார்க ளெல்லாம்
ஒத்தாற் பரதன் பெரி
துத்தமனுதல் உண்டோ''

இலக்குவனுக்குச் சூடு

தமையன் தம்பியரிடையே நிலவவேண்டிய அந்த உயர்ந்த ஒழுக்கத்தையும் அன்பையும் இந்தப் பைத்தியக் குரங்குகளிடத்தில் நாம் எதிர்பார்க்கலாமா? உலகத்திலுள்ள தமையன் தம்பியர் எல்லாரும் ஒத்துப் பொருந்தி அன்புடையராய் ஒன்றுபோல் இருந்தால் பரதனுக்கு ஏது ஏற்றம்? பரதன் சிறந்த தம்பியாவது எப்படி?' என்று கேட்கிருன் இராமன். உற்ருரையும் ஊராரையும் மறந்து காட்டில் வந்து உழன்று, ஊனையும் உறக்கத்தையும் துறந்து குற்றேவல் செய்து கூடவே இருந்துவரும் சிறந்த தம்பியாகிய இலக்குவனை விடுத்து, இலக்குவனிடத்திலேயே சிறந்த தம்பி பரதன் என்று கூறுகின்ருன் இராமன். வேண்டுமென்றே பரதனை இங்கே கூறுகிருன். 'நீ என்னைக் கண்டித்துப் பேசினுயே, பரதனுயிருந்தால் இப்படிப் பேசுவாஞ?' என்று கேட்பதுபோல் இந்த இடத்தில் இலக்குவனுக்கு ஒரு சூடு கொடுக்கிருன் இராமன்.

புதிய சித்தாந்தம்

இலக்குவன் சொன்னதற்கு நேரான பதில் இராமனுல் கொடுக்கமுடியவில்லை. முதலில் தன் மறுப்பை மறைமுகமாய்த் தெரிவித்தான். பிறகு தன் பொறுப்பைத் தட்டிக் கழித்துப் பேச முற்படுகிருன். இராமனு

இப்படிப் பேசுகிருன்? எனக் கேட்கும்படியாயிருக்கிறது. இராமன் தம்பியின் தோளைத் தட்டிக் கொடுக்கிருன். அது கல் போன்று உயர்ந்திருக்கிறது. வில்லும் தொங்குகிறது. 'வில்லைத் தாங்கும் மலைபோன்ற தோள்களையுடையாய்' என்று பேசத் தொடங்கி மேலும் தொடர்கிருன். 'இவ்வுலகில் உண்மையுடையவர்கள் ஒரு சிலரேயாகும். பெரும்பாலோர் பொய்ம்மையையே பெருக்கி வாழ்கிருர்கள். இதுதான் உலகத்துண்மை. அதாவது உலகத்தில் ஒரு சிலரே நல்லவர்கள். மற்றவர்கள் எல்லாம் பொல்லாதவர்களே. நம்மிடம் வந்தவர்களிடத்தில் நமக்கு வேண்டிய நன்மை என்ன என்று பார்த்துக்கொண்டு மற்றவைகளைக் கருதாது விட்டுவிட வேண்டும். அதுவன்றிக் குற்றமேயில்லாதவர் என்று சொல்வதற்கு உலகத்தில் யார் இருக்கிருர்கள்?' என்று இராமன் ஒரு சித்தாந்தத்தைக் கூறுகிருன்.

"விற்ருங்கு வெற்பென்ன
விலங்கெழிற் ருேளமெய்ம்மை
யுற்ருர்சில ரல்லவரே
பலரென்ப துண்மை
பெற்ருருழைப் பெற்ற
பயன்பெறும் பெற்றியல்லால்
அற்ருர் நவை யென்றலுக்காகுநர்
யார்கொல் என்ருன்"

இவ்வாறு வாலியைக் கொல்ல இராமனும் மறைந்து நிற்கலாமா? என்று நாம் சிந்தனையை இலக்குவனேடு சேர்ந்து குழப்பிக்கொண்டு, உத்தமனுக்கும் ஒரு மறு வந்துவிட்டதே என்று நினைக்கும்பொழுது, 'ஆம்! மறு

வில்லாத உத்தமன் இந்த உலகத்தில் ஏது? இருக்கவே முடியாது' என்ற உண்மையை இராமன் வாயிலாகவே சொல்லும்படிச் செய்கிருர் கம்பர்.

காப்பியங்களின் பயன்

'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள், மிகை நாடி மிக்க கொளல்' என்ற குறளின் கருத்தை யெடுத்து இராமன் தன் தம்பிக்கு விளக்கியிருந் தாலும் தக்க விடை பகர்ந்த தாகப் பொருத்தமாய் இருந்திருக்கும். அதைக் கூற முயன்றுதான், செயலில் தடுமாறியதுபோல் சொல்லிலும் தடுமாறிவிட்டானே? என்னவோ? அறத்தின் ஆறெலாம் உலகிற்கு இழைத் துக் காட்டவந்த இராமனே குற்றமற்றவனுய் இருக்க வேண்டிய ஒருவனுன தன்னே மறந்து இவ்வாறு தவறிக் கூறிவிட்டானு? அல்லது தானே மீறித் தவறி விட்டானு? ஒரு தமையன் தன் தம்பியிடம் பேசக் கூடிய பேச்சா இது? தம்பியிடம்சமாதானம் கூறுவதற் காக 'இப் பித்தாய விலங்கின் ஒழுக்கினேப் பேச லாமோ' என்று சொன்னவன், பிறரிடம் குற்றம் பார்க்கக்கூடாது என்று சொன்ன இராமன் இதோ வாலியை அம்பால் வீழ்த்தி, நீ இன்ன குற்றம் செய்தாய் என்று கூறிப் பித்தாய விலங்கின் ஒழுக்கினேப் பேசிக் குற்றம் கூறப் போகிருனே, அது என்ன நியா யம்? இது அறமா? என்று கம்பர் நம்மை சிந்திக்க வைக்கிருர். இத்தகைய சிந்தனேகளேத் தட்டி எழுப்பி மக்கட் பண்புகளே துருவித் துலக்கித் தூய்மைப்படுத்தி மிகவும் உயர்ந்து வளரும்படி செய்வதுதான் இத் தகைய காப்பியங்கள் கற்பதன் பயன் என்பதை நாம் மறத்தல் கூடாது.

இரக்கம் எங்கே ?

இராமன் தன் தம்பிக்குக் கூறிய உண்மைகள் யாவும் உயர்ந்த தத்துவங்களேயாகும். ஆனால் இந்தச் சித்தாந்தத்தை வாலியிடம் மட்டும் கையாள மறந்து விடுகிறான். இராமன் இயல்பாகவே நல்லொழுக்கங்கள் நிறைந்த செப்பருங்குணத்தான். வஞ்சனை மானை ஏவித் தன்மனையாளைச் சிறையெடுத்த நஞ்சனையானை இராவணனிடத்தும் சினத்தைத் துறந்த சிறப்பாளன், கருணை காட்டிய அருளாளன், இராம இராவணப் போரில் முதல் நாட் போர்முடிவில், படையெலாம் இழந்து, மானம் குலைந்து, இருபது கரங்களையும் ஆல விழுதுபோல் தொங்கவிட்டு, நிலையழிந்து, தலை கவிழ்ந்து, வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு நின்ற இராவணனை நோக்கி, 'இன்றுபோய்ப் போர்க்கு நாளைவா' என்று நல்கிய நன்னராளன் இராமன். ஆனால் வாலியிடத்து மட்டும் இரக்கம் இல்லாமல் போய்விட்டது. இராவணனை எதிர்த்து முன்னின்று போர் செய்ய இராமனால் முடிந்தது. வாலியின் முன் னால் இராமன் சென்று வாயாடவோ கையாடவோ முடியவில்லை. வாலியின் வரம் வழி மறித்தது. எனவே மறைந்து நின்று கொல்லத்தான் இராமனால் முடிந்தது.

பாணம் பறந்தது

வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் கடும்போர் நடந்தது. வாலி சுக்கிரீவனைக் குற்றுயிரும் குலையுயிருமாகக் குமைந்து மெலியும்படி அடித்துவிட்டான். இராமன் அம்பைப் போடுவான் என்று சுக்கிரீவன் எதிர்பார்த் தான். அவனுக்கு ஆதி முதலே இராமன் வலிமையில்

ஐயப்பாடு உண்டு. அதற்காகவே மராமரம், துந்துபி போன்ற சோதனைகளை வைத்து இராமன் பலத்தைத் எடை போட்டுப் பார்த்தான். அதற்காகவே அவனைச் சற்று வருந்தும்படி விட்டு வேடிக்கை பார்த்தான் இராமன் என்று இங்கே ஒரு கருத்தைப் பெரியோர்கள் கூறுவதுண்டு. சுக்கிரீவன் மீண்டும் இராமனிடம்வந்து காப்பாற்ற வேண்டினான். வேறுபாடு தெரியாததால் சுணங்கியது என்று கூறி இராமன் காட்டுக்கொடிப்பூ மாலையை அணிந்து செல்லும்படி ஏவ, அவனும் அவ்வாறே மாலைசூடிச் சென்று பொருதான். வாலி தன் தம்பியை இருகைகளாலும் எடுத்துத் தரையில்மோதுவ வதற்காக மேலே தூக்கினான். அப்பொழுது வாலியின் மார்பு இராமனுக்கு எதிரில் யாதொரு தடையுமின்றித் திறந்து காணப்பட்டது. இராமன் வில்லில் ஒருஅம்பை வைத்து அடித்துவிட்டான். பாணம் பறந்தது.

ஏன் அம்பு எய்தான் ?

இதுவரை வாலிமேல் அம்பைப் போடவே மனம் இல்லாமல் நேரத்தைக் கடத்திக் கொண்டே இருந்தான் இராமன். தான் அறிய ஒரு குற்றமும் செய்யாமலிருந்த வாலிமேல் அம்பை எய்யாமலே இருந்தான். ஆனால் இப்பொழுது நிலைமை மாறியது. தம்பியைத் தரையில் அடித்துச் சிதைக்கத் துணிந்துவிட்டான் வாலி. இவ்வகைப் பெருங்குற்றத்தைத் தன் கண்ணுற் காணுமளவும் இராமன் அம்பு செலுத்தாமல் பொறுத்திருந்து அது கண்ட பின்னரே அம்பு தொடுக்கலானான் இராமன். போரில் பகைவனுக்கு ஒரு துன்பம் நேர்ந்த இடத்தில் அவரை அழித்திடாமல் அன்போடு விடுதல் ஆண்மைக்குரிய இலக்கணம். அதனை வாலி மறந்

தான். அது போகட்டும், இன்னுென்றும் உண்டு. தன் தம்பியினிடத்தே மைந்தனிடத்திற் போல அன்பு செலுத்துதல் தந்தையொப்பவனுன தமையனது கடமையாகும். அதற்கு மாருக வாலி தன் தம்பியான சுக்கிரீவனே வலியழிந்தநிலேயிற் சிறிதும் இரக்கமின்றிக் கொல்லத் துணிந்தனன் என்றதும் வெகுண்டு தம்பியர் பக்கல் மிகுந்த அன்பு கொண்டவனுன இராமன் அம்பை எய்தான் என்கிருர் கம்பர்.

“ எடுத்துப் பாரிடை யெற்றுவாம்
பற்றியென் றிளவல்
கடித்த லத்தினுங் கழுத்தினுந்
தன்னிரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலிமேற்
கோலொன்று வாங்கித்
தொடுத்து நாணெடு தோளிறுந்
திராகவன் துரந்தான் ”

பாணம் சென்ற பான்மையைப் பாராட்டி ஒரு பாடல் பாடியுள்ளார்.

“ காரும் வார்சுவைக் கதலியின்
கனியிணேக் கழியச்
சேரும் சூசியிற் சென்றது
நின்றதென் செப்ப
நீரும் நீர்தரு நெருப்பும்
வன்காற்றுங் கீழ்நிமிர்ந்த
பாரும் சார்வலி படைத்தவன்
உரத்தை அப்பகழி ”

நீர், நெருப்பு, காற்று, மண் என்னும் நான்கு பெரும் பூதங்களின் ஆற்றலைப் பெற்றவன் வாலி. நல்ல முதிர்ந்த, அதாவது பழுத்த, சுவையுள்ள கதலி வாழைப்பழத்தை ஊடுருவிச் செல்லும் ஊசியானது எவ்வாறு தங்குதடையில்லாமல் முழுதும் ஊடுருவி அப்பாற் செல்லுமோ அதுபோல் இராமபாணம் வாலியின் மார்பிற் பாய்ந்தது. வேறு என் சொல்ல? என்று கேட்கிறார் கம்பர். வாழைப் பழத்தில் ஊசிபோல வாலியின் மார்பில் வாளி பாய்ந்தது என்றார். இது சுவையுள்ளதொரு பாடல். கதலிபாகமாய்க் கனிகின்றது. ‘வார்சுவைக் கதலி’ என்று கம்பரே கூறுகிறார். யாராவது பேசும் பொருளை மறைத்து வைத்துக் குறிப்பாகப் பேசினால், பொடி வைத்துப் பேசினால், குத்தலாக அல்லது கிண்டலாகப் பேசினால், வாழைப்பழத்தில் ஊசி நுழைவது தெரியாமல் பேசுகிறான் என்பார்கள். வாழைப் பழத்தில் நுழைவது தெரியாமல் ஊசி நுழையும். வேகமாகவும் நுழையும். (அவ்விதமே அம்பும் சென்றது. ஆனால் நின்றது என் செப்ப? என்று கேட்கிறார் கம்பர். நான் அதற்கு மேல் என்ன சொல்வது) பழங்களுக்குள்ளே வாழைப்பழம் மிகவும் கனிவுள்ளது. குழைவுள்ளது. ‘கல்லைப் பிசைந்து கனியாக்கி’ என்று திருவாசகத்தில் பல இடத்திலும் பாடினார் மணிவாசகர். கனி என்றால் மாங்கனியா, மாதுளங் கனியா, திராட்சையா என்ற ஐயம் எழும் அல்லவா? அதை நீக்குவதற்கு, நீத்தல் விண்ணப்பத்தில், ஓரிடத்தில் ‘விரையார்ந்தினிய மதுமதுப்போன் றென்னை வாழைப்பழத்தின் மனங்கனிவித் தெதிர்வதெப்போது

பயில்விக் கயிலைப் பரம்பரனே' என்று பாடியுள்ளார். மற்றப் பழங்களில் கொட்டையிருக்கும். திராட்சைப் பழத்தில்கூட கல்போன்று உருண்ட விதைகள் தடையாக இருக்கும். வாழைப்பழத்தில் அவ்வாறு இல்லை. மலைப்பழம், மொந்தன் பழம் போன்றவற்றில் தோல் தடித்திருக்கும். அவற்றை நீக்கி, இங்கே கதலிப் பழத்தைக் கூறினார். கதலிப் பழத்தின் மிக மிக மெல்லிதாக இருக்கும். அதிலும் நன்றாகப் பழுத்த கதலியின் தோலை உரிக்கக்கூட முடியாதபடி அவ்வளவு மென்மையாய் இருக்கும். ஊசி செல்வதற்குத் தடை ஏற்படாது. அவ்விதமே இராம பாணமும் சென்றது. ஆனால் வாலியின் உரத்தைத் துளைத்துக் கொண்டு செல்லமாட்டாது 'நின்றது' என செப்ப? என்கிறார் கம்பர். இங்கேதான் கம்பர் வாழைப் பழத்தில் ஊசியை உவமை கூறுவதுபோற் கூறி, வாழைப் பழத்தில் ஊசி வைத்துப் பேசுவதை நமக்கு நினைவூட்டி, வாழைப்பழத்தில் ஊசி வைத்துப் பேசுகிறார். மிக விரைவிற் பாய்ந்து அப்புறம் கழன்று போக வேண்டிய அம்பு வாலியின் மார்புக்குள் புகுந்து துளை போட்டுக் கொண்டு நின்றது. ஏன் செல்லவில்லை என்பதை நான் எப்படி கூறுவேன்? என்று விடுகிறார் கம்பர். வில்லற நெறி முறைப்படி இராமன் அம்பு தொடுக்காததால் அது தடைப்படுகிறது. ஆனால் நான் அதைச் சொல்லலாமா? என்று கம்பர் கூறுவது போன்றிருக்கிறது. 'என் செப்ப' என்பது.

தாடகை வதத்தில் இராமன் அம்பு எப்படிச் சென்றது.

“ அலையுருவக் கடலுருவத்
தாண்டகைதன் நீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை
நீயுருவ நோக்கையா
உலையுருவக் கனலுமிழ்கட்
டாடகைதன் உரனுருவி
மலையுருவி மரமுருவி
மண்ணுருவிற் றுருவாளி ”

தனுவின் செல்வன்

இராமன் தனுவின் செல்வன், வில்லின் வீரன். தாடகையின் மார்பைத் துளைத்து, பின்னால் நின்ற மலையைத் துளைத்து, மலைமீதுள்ள மரங்களையெல்லாம் துளைத்துப் பிறகு மண்ணையும் துளைத்ததாம். ஏழு மரா மரங்களின் மேல் இராமன் அம்பு எய்தபொழுது.

“ ஏழுவேலையும் உலகமே லுயர்ந்தன ஏழும்
ஏழு குற்றமும் இருடிகள் எழுவரும் புரவி
ஏழும் மங்கையர் எழுவரும் நடுங்கின என்ப
ஏழு பெற்றதோ இக்கணைக் கிலக்கமென்
றெண்ணி ”

என்று சொல்லப்படுகிறது. அவ்வளவு கடுவேகம் கொண்ட இராமபாணம் வாலியின் மார்பில் நின்றது. வாலி இராமபாணத்தைக் கையினாலும் வாலினாலும் தடுத்துப் பிடித்து நிறுத்திக் கையாற் பிடுங்கி எடுத்துக் கொண்டான். இராமன் வில்லிலிருந்து கிளம்பிய அம்பு வாலியின் மார்பைத் துளைக்க ஆரம்பித்தது. எதிர் பாராத ஆபத்து. வாலி உள்ளக் கிளர்ச்சியிற் சிறிதும்

ஓயாது அவ்வம்பைத் தன் கையாற் பறித்தெடுத்தான். அதைக் கண்ட யாவரும் உள்ளம் பூரித்துத் தோள்கள் வீங்கி வியந்து விம்மித மெய்தினர். கம்பருக்கு ஒரே கொண்டாட்டம். பாடுகிறுர்.

" ஓங்கரும் பெருந்திறலுடை
மனத்தன் உள்ளத்தன்
வாங்கினுன் மற்றவ்வாளியை
யாளிபோல் வாலி
ஆங்கு நோக்கினர் அமரரும்
அவுணரும் பிறரும்
வீங்கினுர்கள் தோள் வீரரை
யார் வியவாதார் "

கம்பருக்கு மனம் உறுத்துகிறது. கவிக்கு நாயகனைக் கொண்டாடவேண்டிய கவிஞர் மற்றொரு கவிக்கு நாயகனைக் கொண்டாடலாமா? அரங்கனைப் பாடும் வாயால் குரங்கனைப் பாடலாமா?

வாலியைப் புகழலாமா?

இராமனுடைய புகழையெடுத்துக் கூறவந்த காவியத்தில் வாலியைப் புகழலாமா? என்ற கேள்வி கம்பர் உள்ளத்தில் கிளர்ந்தெழுகின்றது. ஏன் புகழக்கூடாது? நான் மட்டுமா புகழ்கிறேன்? அதோ! அங்கே, பார்த்துக்கொண்டிருக்கிற தேவர்கள் புகழ்கின்றுர்கள். அசுரர்கள் புகழ்கின்றுர்கள். பிறரும் புகழ்கின்றுர்கள். நானும் புகழ்கின்றேன். வீரரை யார்தாம் புகழ மாட்டார்கள்? என்று கேட்கிறுர் கம்பர். அதே மூச்சில் இன்னொரு கேள்வியும் தொனிக்கிறது. வீரர் அல்லா

தாரை யார் தாம் இகழமாட்டார்கள்? இதைத் தொடர்ந்துதான் வாலி இராமனிடம் சரமாரியாகக் கேள்விகள் கேட்கிறுன். அத்தனையும் கம்பருடைய செயலேயன்ருே?

இன்பக் களஞ்சியம்

கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஒரு கவிஞர் மட்டுமல்ல. அவர் ஒரு கதாசிரியர். அவர் ஒரு கதாசிரியர் மட்டு மல்ல; காசில் கொற்றத்து இராமன் கதையை ஆசை பற்றி யறையவந்த தமிழ்ப் பேரறிஞர். அறிஞர் மட்டு மல்ல; பத்திச்சுவை நனி சொட்டச்சொட்டப் பாடும் கவிவலவர்; அவர் பத்தர் மட்டுமல்ல; பித்தராகவும் இருப்பார்; முத்தராகவும் இருப்பார். முத்தராய் நின்று மறுமையைக் காட்டுவதோடு, இத்தரை வந்து இம் மைக்கு வேண்டிய உலகியல் அறிவு ஊற்றெடுத்துப் பாய அரும்பெரும் உண்மைகளை உதவி நின்று ஞானம் ஊட்டும் குருநாதனுகவும் கூட இருப்பார். இவை எல் லாவற்றிற்கும் மேலாகக் காய்தல் உவத்தலின்றிக் கதா பாத்திரங்களை நன்கு திறனய்வுசெய்து உள்ளதை உள்ளபடி உள்ளவாறு நாம் அறிய அவர்களின் குண குணங்களை வெளிப்படுத்தி நன்மைகளை நவின்று தீமை களைத்திட்டி நீதியைப் புகட்டும் நீதிவானுகவும் திகழ் வார். அதுதான் கம்பர் காவியம் எக்காலத்திற்கும் ஏற்றதான ஓர் இன்பக் களஞ்சியமாக விளங்குகிறது.

அரசின்மீது ஆசை

சிங்கம் போன்ற வாலி அம்பை உருவினுன். குருதி வெள்ளம் அருவிபோன்று குபுகுபுவென்று கொட்டியது.

அண்ணனைக் கண்டு கண்ணீர் பெருக்கித் தம்பி சுக்கிரீவனும் தரையிற்சாய்ந்தான். உண்மையில் அண்ணன் மீது அவனுக்குப் பகையில்லை. அரசின்மீது கொண்ட ஆசைதான் அவனை அல்லற்படுத்தியது என்பார்கள். உடன்பிறப்புப் பாசம் சும்மா விடுமா? சுக்கிரீவனும் அழும்படியான கோரக் காட்சியாயிருந்தது வாலியின் வீழ்ச்சி.

“ வாசத் தாரவன் மார்பெனு
மலைவழங் கருவி
ஓசைச் சோரியை நோக்கினன்
உடன்பிறப் பென்னும்
பாசத் தாற்பிணிப் புண்டவத்
தம்பியும் பசுங்கண்
நேசத் தாரைகள் சொரிதர
நெடுநிலஞ் சேர்ந்தான் ”

ஓசைச் சோரி என்றார். இரத்தம் ஆரவாரித்துப் பாய்ந்ததாம்.

செம்மைசேர் நாமம்

வாலி அம்பில் எழுதியுள்ள பெயரைப்பார்த்தான்.

“ மும்மைசா லுலகுக் கெல்லா
மூலமந் திரத்தை முற்றுந்
தம்மையே தமர்க்கு நல்குந்
தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே யெழுமை நோய்க்கு
மருந்தினை யிராமன் என்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான் ”

'ஆகா! இராமன் நாமம்! மனைவியைப் பிரிந்து வருந்திக் கொண்டிருக்கும் இராமன் என் பொருட்டாக வீரர்க்கு உள்ள தருமத்தையும் துறந்து இவ்விதம் செய்தானு? இத்தகையவன் பிறந்ததால் வேதநெறியில் இறையும் வழுவாத சூரிய குலத்திற்கு என்றும் அழியாத ஒரு பழி நேர்ந்துவிட்டதே!' என்று நினைக்க நினைக்க அவனுல் பொறுக்கக் கூடவில்லை. வாயிற் சிரிப்புத் தோன்ற மனத்தில் நாணம் கொண்டு தலை சாய்த்தான்.

" இல்லறந் துறந்த நம்பி
யெம்மனோர்க் காகத் தங்கள்
வில்லறந் துறந்த வீரன்
தோன்றலால் வேத நூலிற்
சொல்லறந் துறந்தி லாத
சூரியன் மரபுந் தொல்லை
நல்லறந் துறந்த தென்னு
நகைவர நாணுட் கொண்டான் "

பெருந்தகையாளன்

இராமன் செய்த பிழையைத் தான் செய்ததுபோலவும், இராமன் குலத்திற்கு நேர்ந்த வசைச்சொல் தனக்கு நேர்ந்தது போலவும் எண்ணி வெட்கம் அடைந்தான். இதனுல் வாலி பிறருக்குநேரும் பழியையும் தனதாகக் கொள்ளும் பெருந்தகையாளன் என்பது விளக்கமுறும்.

" பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி யென்னும் உலகு "

என்னும் திருக்குறளுக்கு வாலி ஓர் எடுத்துக்காட்டாக இலங்குகிருன். இராமனிடத்தும் அவன் குலத்தாரிடத்

தும் வாலி எவ்வளவு அன்பும் மதிப்பும் கொண்டிருந்தான் என்பதற்கு இது ஒன்றே தக்க சான்ருகும்.

'நீயுமா புரூடஸ் ?'

ஜுலியஸ் சீசர் என்ற ஷேக்ஸ்பியர் நாடகத்தில் பலரும் கத்தியால் குத்தவும் சாகாதிருந்த சீசர், நன்றி கெட்டவனுய் புரூடஸ் என்பவனும் கத்தியை எடுத்துச் சீசரைக் குத்த வந்தவுடன் நீயுமா புரூடஸ்? என்று சொல்லிக்கொண்டே கீழே விழுந்து உயிர் நீத்தான். எப்படி?

பாணமா நாணமா ?

சதிகாரர்களின் கத்திகளை விட புரூடஸினுடைய நன்றி கெட்ட செயலே சீசரினுடைய உயிரை வாங்கி விட்டது என்று அந்தோணி என்பவன் விளக்கம் கூறுகிருன். அதுபோல் இங்கே, இராமபாணம் வாலியின் உயிரைக் கவர்ந்தது என்று சொல்வதைவிட, இராமன் செய்கையால் வாலிக்கு ஏற்பட்ட நாணமே வாலியைக் கீழே வீழ்த்தியது. பாணத்தைவிட நாணமே வாலியைக் கீழே தள்ளியது. வெட்கத்தால் தலைகுனிந்தான்; பேரொலி உண்டாகச் சிரிப்பான்; மீளவும் சிந்திப்பான்; இப்படியும் ஒரு தரம் இருக்குமோ என்று நினைத்துப் பார்ப்பான்; இவ்வாறு குழியில் அகப்பட்ட மதயானை போலத் துன்பப்பட்டு நிலைகலங்கித் தளர்வதானுன்.

"வெள்கிட மகுடஞ் சாய்க்கும்
வெடிபடச் சிரிக்கு மீட்டும்
உள்கிடும் இதுவுந் தானோர்
ஓங்கற மோவென் றுன்னு

முள்கிடுங் குழியிற் புக்க
மூரிவெங் களிநல் யானை
தொள்கொடுங் கிடந்த தென்னத்
துயருழந் தழிந்து சோர்வான் ''

என்ன பிழை கண்டாய்?

வாலி மண்ணில் விழுந்த பின்னரே ஒளிந்திருந்த இராமன் வெளியில் வந்தான். இராமனைக்கண்ட வாலி ஏசுவதாகக் கூறப்பட்ட பாடல்கள்அனைத்தும் இராமன் செய்த தவற்றைப் புலப்படுத்துவனவே யன்றித் தான் உயிர் துறப்பதற்கு வருந்தியதாக ஒன்றும் காணப்பட வில்லை. வாலி இராமனது பரக்கழித்தனத்தை நன்கு எடுத்துப் புலப்படுத்தி அரக்கர் செய்த பிழைக்குத் தன்னைக் கொலை செய்தது தகாது என்று இடித்துக்கூறி 'உனக்கு இயற்கையாகவுள்ள இரக்க குணத்தை எங்குத் தொலைத்தாய்? என்னிடத்தில் என்ன பிழை யைக் கண்டாய்?' என்று கேட்கிறான்.

" அரக்கரோ ரழிவு செய்து
கழிவரே லதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல
மனுநெறி கூறிற் றுண்டோ
இரக்கமெங் குகுத்தா யென்பால்
எப்பிழை கண்டா யப்பா
பரக்கழி யிதுநீ பூண்டாற்
புகழையார் பரிக்கற் பாலார் ''

திகைத்தனை போலும்!

இதற்கு இராமன் கூறிய சமாதானங்கள் ஒன்றும் பொருத்தமாக வாலிக்குத் தோன்றவில்லை. ஆயினும்

இராமனுடைய புகழ்களை முன்பு காதாரக்கேட்டு மனம் மகிழ்ந்து அவனிடத்தில் அன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்த வாலிக்கு இப்பொழுது வேருக, எதுவும் மாருக இராமனைக் கருத மனம் தாங்கவில்லை. அரச தருமம் என்பது இராமனது குலத்துப் பிறந்தவர்களுக்கெல்லாம் பொதுச்சொத்து. அது இராமனுக்கும் உரித்தாகும். மனைவியைப் பிரிந்து மனம் கலங்கிய நிலையில் இன்ன செய்வது என்று தெரியாது திகைத்துவிட்டான் போலும்.

“கோவியற் றரும முங்கள்
குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணு
வுருவத்தா யுடைமை யன்ரே
ஆவியைச் சனகன் பெற்ற
அன்னத்தை யமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலுஞ் செய்கை”

கேள்விக்குறி

வாலி இறந்தநாள் தொட்டு இன்றுகாறும் இராமன் வாலியைக் கொன்றது நியாயமா? அநியாயமா? என்கிற விசாரணை இடையருது நிகழ்ந்து வருகின்றது. இது உலகம் உள்ளளவும் ஒரு கேள்விக் குறியாகவே நிற்கும். பக்திமான்களும், ஆராய்ச்சி வல்லுநர்களும் எவ்வளவுதான் கூடிச் சமாதானம்கூறி நியாயம் என்று விவாதித்தாலும் கூட அதை ஏற்றுக்கொள்வது மேட்டு மடையாகவே காண்கிறது. ‘என்னை எப்படி ஏன் கொன்ருய்?’ என்று கேட்கும் வாலி, தானே அதற்கு

ஒரு காரணம் இருப்பதுபோல் கண்டுபிடித்துக் கூறி யுள்ளான். அவனு கூறுகிறுன்? கம்பரே கூறுகிருர்.

"தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலும் செய்கை"

சீதை அருகில் இல்லாததன் காரணமாகவே இராமன் இத்தகைய அநீதியான செயலைச் செய்யத்துணிந்தான். அவள் அவனருகே இருந்தாளாகில் இவ்வாறு வில்லறந் துறந்து வாலியைக் கொன்றிருக்கமாட்டான். வாலியைவிட மிகவும்கொடியவன் காகாசுரன். அவன் இராமன் இருக்கும்பொழுதே சீதையின் விலாவினைக் கொத்திப் பிடுங்கினுன். அவனைக்கூட இராமன் அம்பு போட்டு உயிரை வாங்கவில்லை. பிராட்டி சன்னிதியிலே காகம் தலை பெற்றது. இங்கே பிராட்டி சன்னிதியில்லாமையாலே வாலி கொல்லப்பட்டான். இதை அறிந்து கூறுவது போல கம்பர் வாலியின் வாயிலாக 'தேவியைப் பிரிந்த பின்னர் திகைத்தனை போலும் செய்கை' என்று உண்மையைக் கூறினுர்.

கேள்விச் செல்வன்

இராமனை வாலி இதற்குமுன் நேரிற் கண்டதில்லை. ஆனுல் அவனுடைய புகழ் எங்கெல்லாம் பேசப்பட்டதோ அங்கெல்லாம் தனது காதுகளை நீட்டி விரும்பிக் கேட்டு மகிழ்ந்திருக்கிருன். கண்ணுல் காணுது போயினும் காதால் நிறையக் கேட்டுக் கேள்வியால் தெரிந்தீருந்தான்.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்
அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை'

என்பது 'திருக்கிறள்''. செவியால் வரும் செல்வமாவது கேள்வியால் எல்லாப் பொருளேயும் அறிதல். இந்தக் கேள்விச் செல்வத்தை வாலி பெற்றிருந்ததால் அவனுக்கு கேள்விச் செல்வன் என்று கம்பர் பட்டம் சூட்டுகிருர். நுணங்கிய கேள்வியுடையவன் எளிதில் வணங்கியவாயினனுவான். அவன் சீற்றமும் தணிந்து விடும். கேள்விச் செல்வனுன வாலியும் கோபம் ஆறி, இராமன் தவறு செய்யமாட்டான் என எண்ணினுன்.

"கவிகுலத் தரசு மன்னன்
கட்டுரை மனத்திற் கொண்டான்
அவியுறு மனத்த னுகி
அறத்திற னழியச் செய்யான்
புவியிடை யண்ண லென்ப
தென்னினன் பொருந்தி முன்னே
செவியுறு கேள்விச் செல்வன்
சென்னியை யிறைஞ்சிச் சொன்னுன்"

இதனுல் வாலி கேள்வி ஞானத்தால் சிறந்த இராம பக்தனுய் விளங்கினுன் என்பதைக் கம்பர் குறிப்பாக நமக்குக் காட்டுகிருர்.

சிறியன சிந்தியாதான்

'எல்லா உயிர்களுக்கும் தாய்போல அன்புகாட்டி, தருமமும் நடுவு நிலேமையும் சான்ருண்மையும் நீயே யென்று சொல்லும்படி நின்ற செம்மலே! நூல் முறைப் படியுள்ள நெறிமுறைகளே நாய் போன்று எளியரான எங்களிடத்தில் குற்றங்கள் இல்லாமல் பார்க்க முடியுமா? நான் செய்த தீமைகளேப் பொறுத்தருள்வாய்'

என்ருன் வாலி. அவன் எத்தகையவன்? 'சிறியன சிந்தியாதான்' என்கிருர் கம்பர்.

"தாயென வுயிர்க்கு நல்கித்
தருமமுந் தகவுஞ் சால்பும்
நீயென நின்ற நம்பி
நெறியினின் நோக்கும் நேர்மை
நாயென நின்ற எம்பால்
நவையற உணர லாமே
தீயன பொறுத்தி யென்ருன்
சிறியன சிந்தி யாதான்"

இங்கு வாலி தன்னை 'நாய்' என்று குறிப்பிடுகிருன். தான் நாய் போல் இராமனுக்கு அடிமை செய்பவன் என்பதையும் சுட்டினதாக நாம் கொள்ளலாம். 'எறிந்த வேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்' என்பது நாலடியார். இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு வாலி. இராமன் எறிந்த அம்பு அவன் உடலைத் துளைத்துக் கொண்டிருக்கும் பொழுதும், தான் செய்த தீமைக்கு மன்னிப்புக் கேட்டு இராமனை வணங்கி அவனைச் சரண் அடைகின்ருன் வாலி. ஆயின், அவன் எதுவும் தவறு செய்தவனே எனின், சிறியன சிந்தியாதான் என்று கம்பரே சொல்லுகின்ருர். சின்னப் புத்தியே வாலிக்குக் கிடையாது. தீய எண்ணம்கூட அவன் சிந்தையிற் புகாது. தீய எண்ணமே கிடையாது என்ருல், தீய செயலுக்கு இடம் ஏது? தீயவற்றைச் செய்யவே மாட்டான். தீயன சிந்தியாதவன், தீயன செய்யாதவனுன வாலி இராமனிடம் 'தீயன பொறுத்தியென்ருன்'.

மேலும் அந்தச் சொற்றொடர் காட்டும் உண்மை ஒன்று உண்டு. 'ராமன் சத்யம் பராக்ரமம்' என்பதைத்தான் கம்பர் நல்ல தமிழில் 'காசில் கொற்றத் திராமன்' என்ருர். இராமன் மிகவும் உயர்ந்தவன். அவன் பிறப்பு ஓர் அவதாரம். அவன் அயோத்தியில் செயற்கரிய தியாகத்தைச் செய்து, காட்டில் வழி நெடுக அருளைக்காட்டி அன்பை ஊட்டித் துன்பை ஓட்டித் தீயரை விரட்டி வந்திருக்கிருன். அப்படிப் பட்ட ஒரு பெரியவன், சக்கரவர்த்தியின் திருமகன், பரதனின் தமையன் ஏதோ பிழைபட்ட எண்ணத்தில் தன்னைத் தடிந்ததற்காக அவனைப் பகைக்கலாமா? தன் உயிர் ஒரு சிறு பொருள். அதைப் பார்க்கக் கூடாது. அப் பெரியவனைப் பார்க்க வேண்டும் என்று கருதி வணங்கிய வாலிசிறியன சிந்தியாதவனே யன்றோ?

நாட்டரசும் வீட்டரசும்

வெற்றரசாகிய நாட்டரசெய்தித் தனக்கு வீட்டரசு நல்கிய தம்பி சுக்கிரீவனை வாலி மனமார வாழ்த்தி, இராமனிடம் தன் தம்பி ஏதாவது தவறு செய்தால் அதைப் பொறுக்கும்படி வேண்டுவதும், இராமனின் தம்பிமார்கள் ஒருபொழுதும் சுக்கிரீவனைத் தமையனைக் கொன்றவன் என்று ஏளனம் செய்யும்படி விடலாகாது என்று வேண்டுவதும் முதலிய செய்திகள் வாலியின் விரிந்த மனப்பான்மையை விளக்குகின்றன. அவற்றை உன்னுந்தோறும் சேக்கிழார் காட்டும் மெய்பொருள் நாயனரின் வரலாறே நம் மனக்கண் முன் வந்து நிற்கின்றது. அந் நாயனர் 'தத்தா! நமர்!'

என்று தடுத்துச் சொல்லிக்கொண்டே வெட்டப்பட்டு விழுந்ததும், பின் தன்னை வஞ்சித்துக் கொலை செய்த முத்திநாதனைத் தன் குடிமக்கள் வருத்தாதபடி, தத்தனைக்கூட அனுப்பி அக்கொடிய கொலைகாரனை உயிர் பிழைக்க வைத்ததும் வாலியின் செயலகளோடு ஒக்குமல்லவா?

நாயன்மாருள் ஒருவன்

'அம்பிடை தொடுக்குமோ அருளின் ஆழியான்' என்று இராமனைப் போற்றிக் கொண்டே வெளிப் போந்த வாலி அவ்விராமன் அம்புக்கே இரையானான். ஆயினும் வாலி ஒரு சிறந்த சிவபக்தன். அறுபத்து மூன்று நாயன்மாரோடு அறுபத்துநாலாவதாகக் கொள்ளத்தக்கவனேயாகும்.

அனுமனுடைய பிடிப்பு

சொல்லின் செல்வனாகிய அனுமன் தனது சொல்லின் ஆற்றலால் இராமனைத் தன் கைப்பாவையாக வைத்து ஆட்டினான். வாலியைக் கொல்லும்படி இராமனைத் தூண்டினான். இராமன் அதன் நியாயம், நெறிமுறைகளைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. அனுமன் எது சொன்னாலும் அப்படியே செய்ய வேண்டும் என்று, வாலியைக் கொன்றுவிட்டான். இதனால் இலக்குவன் மனம் சிறிது வருத்தமுற்றது. ஆயினும் அவனால் எதுவும் செய்யக்கூடவில்லை. அனுமனுடைய பிடிப்பு அவ்வளவு திறமையாய் அமைந்துவிட்டது. இது நமக்கு எப்படித் தெரிகிறது என்றால், கார் காலம் கழித்துச் சொன்னபடி படைகளைத் திரட்டாது சுக்கிரீவன் நன்றி

கொன்று அருநட்பினை நாரறுத்து மெய்ம்மை சிதைத்து, உரை பொய்த்தவனாய், இராமனிடம் வராததைக் கண்டு இராமன் இலக்குவனைச் சுக்கிரீவனிடம் அனுப்பினான். இலக்குவன் வருவதைக் கண்டு அனுமன் அவன் கோபம் தணிவதற்கு உரிய வழிகளையெல்லாம் முதலில் கடைப்பிடித்துப் பின்னர் தானே நேரில் அவன் முன்னர்த் தோன்றி, நாங்கள் சொன்னபடி சோர்விலாது நடப்போம். அதில் ஐயம் வேண்டாம். தருமத்தின் சாட்சியாகச் சொல்கிறேன். சுக்கிரீவனிடம் வா, போகலாம்' என்று அழைத்தான். (உன்றம் முனைச் சார்தி) அப்பொழுது இலக்குவன், 'முன்பும் நீ சொன்னபடியே நடந்தோம். இனிமேலும் நீசொல்லியதையே செய்ய உடன்படுகிறோம்' என்று கூறி அவனோடு சுக்கிரீவனைக் காணச் சென்றான்.

" முன்னும்நீ சொல்லிற் றன்றோ
முயன்றது முற்றுங் காலை
இன்னும்நீ யிசைத்த செய்வா
னியைந்தனம் என்று கூறி
அன்னதோர் அமைதி யான்றன்
அருள்சிறி தறிவான் நோக்கிப்
பொன்னின்வார் சிலையி னானும்
மாருதி யோடும் போனான் "

பட்டமும் பாவையும்

'வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்குப் பட்டம் சூட்டினால்தான் படை திரட்ட முடியும்; படை திரட்டியே பாவையைத் தேடலாம்' என்று கூறி அனுமன் இராமனைத் தூண்டினான்.

“ கொடுந்தொழில் வாலியைக்
கொன்று கோமகன்
கடுங்கதி ரோன்மக
ஞுக்கிக் கைவளர்
நெடும்படை கூட்டி
ஞலன்றி நேடரிது
அடும்படை யரக்கர்தம்
இருக்கை ஆணையாய் ”

என்றது காண்க.

வணங்கு மைந்த!

இராமனும் ஏதோ முன் பின் எண்ணுது சுக்கிரீவனுக்கு வாக்குக்கொடுத்ததன் விளைவாலும், சொல்லின் செல்வனின் சொல்வன்மையாலும் சூழ்ச்சியாலும், செல்வாக்காலும் வாலிமேல் அம்பைப் போட நேர்ந்ததே தவிர, இராமன் அதை விரும்பவில்லை; வாலி தன் மகன் அங்கதனை அழைத்து, ‘தனக்கு மேலொரு பொருளுமில்லாத மெய்ப்பொருள் இராமன். கண்கண்ட தெய்வம். பிறவி நோய்க்கு மருந்து. அவனை நீ வணங்கு’ என்ருன்.

“ பாலமை தவிர்நீ யென்சொற்
பற்றுதி யென்னி னைய
மேலொரு பொருளு மில்லா
மெய்ப்பொருள் வில்லுந் தாங்கி
கால்தரை தோய நின்று
கட்புலக் குற்ற தம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு
மருந்தென வணங்கு மைந்த ”

இவ்வாறு கூறி, இராமனிடம் அங்கதனைக் கையடை யாகக் கொடுத்தான். இராமனும் தனக்கு வாலியிடம் பகையில்லை என்பதைக் காட்டத் தன் உடைவாளை நீட்டி, 'நீ இதைப் பொறுத்துக்கொள்வாய்' என்று சொன்னான். ஏழுலகத்து உயிர்களும் வாலியைக் கொண்டாடின. அவன் வானோர்க்குயர்ந்த உலகம் எய்தினான்.

> " தன்னடி தாழ்த லோடும்
> தாமரைத் தடங்க ணானும்
> பொன்னுடை வாளை நீட்டி
> நீயிது பொறுத்தி யென்றான்
> என்னலும் உலக மேழும்
> ஏத்தின இறந்து வாலி
> அந்நிலை துறந்து வானுக்
> கப்புறத் துலக னானான் "

பாவம் தீர தவம் செய்வேன்

வாலி இறந்தபொழுது சுக்கிரீவனைவிட இராமன் அதிகம் அழுதான் என்று வான்மீகத்தில் கூறப்படுகின் றது. ஆனால் வெறும் அழுகையால் பயனில்லை என்று கம்பர் அங்ஙனம் கூறவில்லை. ஒப்புக்கு அழுத கண் ணீர் உப்புக்கும் உதவாது. செய்த தவற்றைக் கண் ணீர் கழுவி விடாது. அதற்கு உரிய கழுவாயால்தான் மாற்ற வேண்டும். இராமனும் தான் செய்த தவற்றைப் பின்னால் நன்கு உணர்ந்து பலமுறையும் உள்ளம் உளைந்து வருந்தியிருக்கிறான். வாலி இறந்தபின் சுக் கிரீவன் இராமனைக் கிட்கிந்தைக்கு அழைத்தபொழுது, இராமன் அதற்கு இசையாது, 'நான் என் மனைவியை

இழந்து காட்டில் வருந்திக்கொண்டிருக்கும் வேளையில், வில்லறமாகிய போரின் தருமத்தையும் கடந்து, மறைந்து நின்று வாலியைக் கொன்ற பாவங்கள் தொலையும் பொருட்டுக் காட்டிலிருந்தே கடுந்தவம் செய்யப் போகிறேன்' என்றான்.

"இல்லறந் துறந்தி லாதோர்
இயற்கையை யெதிர்ந்து போரின்
வில்லறந் துறந்து வாழ்வேற்
கின்னன மேன்மை யில்லாச்
சில்லறம் புரிந்து நின்ற
தீமைகள் தீரு மாறு
நல்லறந் துறந்த நோன்பின்
நவையற நோற்பல் என்றான்"

உத்தமனுக்கும் மறு

அரசைத்துறந்து ஆண்டியாகி, நாட்டைத்துறந்து காட்டையடைந்து, மனைவியை இழந்து மனமும் உழன்று, போரின் வில்லறம் துறந்து வாலியை அவன் நிராயுதனாய் நிற்கையில் மறைந்து அம்பை எய்து கொன்று, பல தீமைகளைப் புரிந்த நான் உன் அரண் மனையில் வந்து வாழ்வது சில்லறமாகிய கீழோர் செய லாகும்; வாலியைக் கொன்றதாகிய தீமைகள் தீரும் வண்ணம் நான், நீ படையுடன் வரும்வரை, தவம் செய்து கொண்டிருப்பேன்' என்று சொன்னான். அதன் படியே கார்காலம் முழுதும் தவம் செய்துகொண்டு அம் மலைச்சாரலில் தம்பியுடன் தனியே இருந்தான். இவ் வாறு உத்தமனுக்கும் ஒரு மறு ஏற்பட்டது. உலகில் அற்றார் நவை என்றலுக் காகுநர் யார்கொல்?

இந்த ஒரு குற்றம் செய்ததாலேயே இராமன் மனிதனாகி நம்மால் புரிந்து கொள்ளக்கூடிய நம்பி யாகிறான். இல்லாவிடில் அவன் தெய்வமாகி நம்மால் அவனைத் தொடவும் தொடரவும் முடியாத தொலைக்குப் போயிருப்பான்.

சிவகாமி அச்சகம், அண்ணாமலைநகர்.